பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 09 ஞாயிற்றுக்கிழமை 23.06.2024 கதிர் 228

## ரணிலுக்கே எமது ஆதரவு
### பிள்ளையான் அறிவிப்பு



எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில்ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவிற்கு தமது கட்சி ஆதரவளிக்கவுள்ளதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலை வரும், இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் தமிழ்மக்கள்விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை 8

### உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் சேதமான
## மட்டு. சியோன் தேவாலயத்திற்கு ஜனாதிபதி நேற்று நேரில் வருகை





உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு உள்ளான மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தின் புனரமைப்புப் பணிகளை ஆராய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று முற்பகல் அங்கு வருகை தந்தார்.

தேவாலயத்திற்கு வந்த ஜனாதிபதி, தேவாலயத்தின் பிரதான போதகர் ரொஷான் மகேசனுடன் கலந்துரையாடினார். தேவாலயத்தின் புனரமைப்புப் பணிகள் இதுவரை ஏன் நிறைவடையவில்லைஎன்பதுதொடர்பில் கேட்டறிந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, 8

## இது ரகசியம் அல்ல!

முஸ்லிம் காங்கிரஸின் பேராளர் மாநாடு (பொதுக் கூட்டம்) நேற்று காத்தான்குடியில் இடம்பெற்றது. தமிழ் அரசுக் கட்சிக் கூட்டம் போன்று அங்கேயும் பிரச்சினைதான். கடைசியில் அடிதடியாகி மூன்று பேரைக் கைது செய்யும் நிலைமை தோன்றியிருக்கிறது.

மாநாட்டின் தொடக்கத்தில் சம்மாந்துறையில் இருந்து சென்ற சிலருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனாலேயே பிரச்சினை தோன்றியது. குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் அணியின் தலைவராகச் செயற்பட்டவர்கள் உள்ளிட்டவர்கள் கூட்டத்0ற்குள் உட்பிரவேசிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

எனினும் ஹிஸ்புல்லாஹ் அவர்களுடன் உரையாடி மீண்டும் அவர்களை மண்டபத்துக்குள் அழைத்துச் செல்ல முனைந்தார். அவர்கள் மண்டபத்திற்குள் சென்றபோது அமைதியின்மை ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட கைகலப்பில் அமைதியின்மையை தோற்றுவித்த மூன்று பேர் கைது செய்யப்பட்டனர் என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கட்சியில் சிலருக்கு பதவி வழங்கியமை தொடர்பில் தாம் அதிருப்தியடைவதாகக் 2

### சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தீர்மானம்
# மாகாண சபைத் தேர்தலை முடக்காது நடத்தவேண்டும்
### தேர்தல்களை ஒத்திவைத்தால் போராடவும் முடிவு

**இனப்பிரச்சினைக்கு அரசமைப்பு ஊடாக ஆகக்குறைந்த தீர்வாக மாகாண சபை முறைமை காணப் படுகையில் அதற்கான தேர்தலை முடக்கி வைத்திருக்காது நடத்த வேண்டும் என்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.**

**காத்தான்குடி ஹிஸ்புல்லா கலாசாரமண்டபத்தில்இடம்பெற்று வரும் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் 31ஆவது** 2

## மு.கா தலைவராக ஹக்கீம் மீள தெரிவு

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக ரவூப் ஹக்கீம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கட்சியின் 31ஆவது பேராளர் மாநாடு நேற்று காத்தான்குடியில் நடைபெற்றது. அதில் இந்தத் தெரிவுகள் இடம்பெற்றன.

கட்சிப் பதவி நிலைகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பெயர்கள் மாநாட்டில் அறிவிக்கப்பட்டன. கட்சியின் தலைவராக ரவூப் ஹக்கீமும் செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான அலிசாஹிர் மௌலானா எச்.எம்.எம்.ஹரிஸ், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் உள்ளிட்ட 7 பேர் உப தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## மு.கா. தலைமை அதிகாரத்திற்கு அடிபணிந்து சோரம் போகாது
### பேராளர் மாநாட்டில் ஹக்கீம் உறுதி

மு.காவின்தலைமை சோரம்போகிற தலைமையாக இருக்கமாட்டாது. குறிப்பாக, அதிகாரத்துக்கு அடிபணிந்து சோரம்போகிற தலைமையாக ஒருபோதும் இருக்காது என்று சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரித்தார்.

சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 31ஆவது பேராளர் மாநாடு நேற்று காத்தான்குடியில் நடைபெற்ற போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தலைமை 2

## இருட்டை நீக்கி வெளிச்சம் கொண்டு வருபவர் ரணில்
### வியாழேந்திரன் எம்.பி. இப்படிப் பாராட்டு



இருட்டைத் திட்டுவதற்கு பலர் இருந்தாலும் இருட்டை நீக்கி வெளிச்சத்தைக் கொண்டுவர ஒருவர் தேவை. அந்த ஒருவராக ஜனாதிபதி இந்த நாட்டைப் பொறுப்பேற்றார். வர்த்தக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் 2

## அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு இந்தியாவுடன் சிறந்த பங்காளித்துவம்
### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

இலங்கையின் அபிவிருத்திஇலக்குகளை அடைவதற்காக, இந்தியாவுடன்சிறப்பான பங்காளித்துவத்தைத் தொடர எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கதெரிவித்தார்.

வலுசக்தித் துறை தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையிலானபங்காளித்துவத்தை அதிகரிப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும்அவர்தெரிவித்தார். அத்துடன்,30வருடகாலப் போரினால்பாதிக்கப்பட்ட வடக்குமக்களுக்குபுதிய அபிவிருத்தியை 8

## மோசமான பொருளாதார நிலையில் எப்படி சம்பள உயர்வு வழங்குவது?
### இப்படிக் கேட்கிறார் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான்

நாடுமிக மோசமான பொருளாதார நிலையில் இருக்கும்போது,எவ்வாறு வேலைவாய்ப்புக்களை வழங்குவது,சம்பளஉயர்வுகளை வழங்குவது என்றகேள்விஇருக்கிறது கிராமிய வீதிகள் அபிவிருத்தி 8

## 40 வயதுக்கு மேற்பட்டோருக்கும் தே.அ.அட்டையை பொற வாய்ப்பு

நாற்பது வயதிற்கு மேற்பட்ட இதுவரையில் தேசிய அடையாள அட்டைகளைப்பெற்றுக் கொள்ள முடியாதவர்களுக்கு அதனைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட உள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்கள்அடையாள அட்டைகளைப் பெறுவதற்கான கால அவகாசம் இம்மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த தகவலை ஆட்பதிவுத் திணைக்களத்தின்ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி தெரிவித்துள்ளார். 2

## மட்டு. மாவட்டத்தில் கனிமத்துறையை மேம்படுத்தும்படி ஜனாதிபதி பணிப்புரை

மட்டக்களப்பு மாவட்டத்தில்கனிமத்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

ஆளும் தரப்பு முன்னெடுத்து வரும் 'உறுமய' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு திராய்மடு மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்றபோது உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று ஜனாதிபதி ரணில்விகரமசிங்கவை வரவேற்பதில் பெருமை கொள்கிறோம். இந்தத் திட்டம் அவரால் தொடங்கப்பட்டதிட்டம்என்பதைக் கூற வேண்டும். 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கூறி ஒரு தொகுதி அதிருப்திக் குழுவினர் மண்டபத்தில் இருந்து வெளியேறினர். அவர்கள் வெளியேறிய தருணத்தில் கட்சித் தலைமை உட்பட அனைவரையும் வெகுவாக விமர்சித்திருந்தனர். எனினும் இந்தச் சம்பவங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட ஹக்கீம், கட்சியின் பெயருக்கு களங்கம் விளைவிப்பதற்கு முனைந்தவர்கள் வெளியேற்றப்பட்டனர் என்று குறிப்பிட்டார்.

வீட்டுக்கு வீடு வாசல்படிதான் போல....

..................................................

பல்கலைக்கழகங்களில் கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் மாதங்களைக் கடந்தும் தீர்வின்றித் தொடர்கின்றது. இப்போதைக்கு இந்தப் போராட்டத்திற்குத் தீர்வு கிடைக்கும் என்றுபடவில்லை. இதனால் மாணவர்களும் கல்விசார் ஊழியர்களும் சற்று அசூசை அடையத் தொடங்கியுள்ளனர் என்றுபடுகின்றது. இது விரைவில் பிணக்குகளாக உருவாவதற்கான ஏதுநிலைகளையும் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஏற்கனவே அதற்கான அரசல் புரசலான அறிகுறிகள் தென்படத் தொடங்கிவிட்டன. பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் விடுத்த ஒரு அறிக்கையில், தமது உறுப்பினர்களின் பணிச் சூழலும் கௌரவமும் பாதிக்கப்படத்தக்க சம்பவங்கள் இந்தப் பணிப்புறக்கணிப்பையொட்டி இடம்பெறுவது குறித்து ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றது.

இந்த பணிப் புறக்கணிப்பில் தாம் பங்குபற்றாத நிலையில் தமது உறுப்பினர்கள் கடமைக்குச் செல்லவேண்டிய கட்டாயம் இருக்கிறது என்றும் அவ்வாறு கடமைக்குச் செல்லும் கல்விசார் ஊழியர்களுக்கு இந்தப் போராட்டத்தால் பல தடைகளும் இடைஞ்சல்களும் ஏற்படுகின்றன என்றும் அந்த அறிக்கை கூறியிருக்கின்றது. இந்தத் தடங்கல்களை கல்வி சாரார ஊழியர்களே ஏற்படுத்துகின்றார்கள் என்றும் தெரிவித்துள்ளது.

அதற்கு உதாரணமாக அந்த அறிக்கையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான வாயில் ஊடாக கல்விசார் ஊழியர்கள் இயல்பாகப் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை இருப்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட முரண்பாடுகள் அற்ற சூழலைப் பேணுமாறும் தொழிற்சங்கத் தலைவர்களை அந்த அறிக்கை கேட்டிருக்கின்றது. ஆனால், நிலமை சுமுகமாவதைவிட இன்னும் இறுக்கமாகும் சூ-ழல்தான் இருப்பதாகப்படுகின்றது.

மாணவர்கள் தமது கல்வி ஆண்டை காலாகாலத்தில் முடிக்கும்படி அழுத்தம் கொடுக்கும் நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மாணவர்களுக்கான பரீட்சைகளை நடத்தத் தொடங்கியிருக்கின்றது. இந்த நிலையில் மாணவர்களும் ஆசிரியர்களும் பல்கலைக் கழகத்திற்குள் இயல்பாக நுழைய முடியாத வகையில் பிரதான வாயிலை மறித்து கல்விசாரா ஊழியர்கள் சத்தியாக்கிரகம் இருப்பதுதான் முரண்பாட்டின் தோற்றுவாயாக மாறி இருக்கின்றது. அனைவரும் நடந்தே பிரதான வாயிலைக் கடக்கும் நிலை இப்போதைக்கு இருக்கிறது.

உள்ளகப் பேச்சுக்களுக்குப் பின்னர் மாணவர்களும் ஆசிரியர்களும் உள்நுழையத்தக்க வகையில் விஞ்ஞானபீட வாயில் திறந்துவிடப்பட்டது. ஆனால், அதற்கு முன்னாலும் கல்விசாரா ஊழியர்கள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடத் தொடங்கியமை முரண்நிலையைத் தோற்றுவித்திருக்கின்றது. நாளை திங்கட்கிழமை இந்த நிலை தொடர்ந்தால் குழப்பங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றது.

ஏனைய பல்கலைக்கழங்களில் இப்படி பிரதான வாயிலை மறித்து, போக்குவரத்துச் செய்ய முடியாத வகையில் சத்தியாக்கிரங்கள் இடம்பெறவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. உரியவர்கள் தலையிட்டு பிரச்சினைக்கு சுமுகமாகத் தீர்வு காணாத வரையில் முரண்பாடு தீவிரம் பெறுவதைத் தவிர்க்க முடியாது போகலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேராளர் மாநாடு அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றபோதே மேற்கண்ட தீர்மானம் உட்பட முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அத்தீர்மானங்கள் வருமாறு:

ஊழல், மோசடி, நிர்வாகத் திறனின்மை மற்றும் இனவாதம் போன்றவற்றால் வறிதாக்கப்பட்ட நாட்டினை மீளக்கட்டியெழுப்பும் முயற்சிக்கு மாற்றமாக - அதே ஊழல் மோசடியைக் கையிலெடுத்து பொருளீட்டல் செய்வதனையும் - மக்கள் மீது மீண்டும் மீண்டும் வரிச் சுமையை அதிகரிக்கும் மக்கள் - விரோத பொருளாதாரக் கொள்கைகளையும் அப்பேராளர் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

அவ்வாறே, நாட்டு மக்கள் தமது பிரதிநிதிகளை உரிய காலத்தில் தெரிவு செய்யும் வகையில் - தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்குத் தடையேற்படுத்தும் வண்ணம் - தேர்தல்களைப் பிற்போடுவதையோ அல்லது இழுத்தடிப்புச் செய்வதையோ - இப்பேராளர் மாநாடு கண்டிப்பதோடு - அம்முயற்சிகளுக்கு எதிராக ஜனநாயக ரீதியில் போராடவும் தீர்மானிக்கிறது.

நாட்டின் நாடாளுமன்றத் தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டு வருவதற்கான எந்தவொரு முயற்சிகளிலும் - சிறுபான்மை மற்றும் சிறுகட்சிகளின் பிரதிநித்துவங்கள் பாதிப்புக்கப்படாத வண்ணம் - தொடர்ந்தும் விகிதாசாரத் தேர்தல் முறைமை பாதுகாக்கப்படல் வேண்டும் என இப்பேராளர் மாநாடு வலியுறுத்துகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் சாசன ரீதியில் ஆகக்குறைந்த தீர்வாகக் கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமையைத் தொடர்ந்தும் செயற்படுத்தாமல் முடக்கிவைத்திருப்பதையோ அல்லது மாகாண சபைத் தேர்தல்களை இனியும் இழுத்தடிப்பதையோ இப்பேராளர் மாநாடு மறுப்பதோடு, விகிதாசாரத் தேர்தல் முறையின் அடிப்படையில் மாகாண சபைத் தேர்தல்கள் அவசரமாக நடத்தப்படல் வேண்டும் எனவும் வலியுறுத்துகிறது.

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தி - மக்களின் அடிமட்டத்திலான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாட்டை ஊக்குவிப்பதை - அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் - கொள்கை ரீதியாக ஏற்றுக்கொண்டு செயற்பட முன்வருமாறு - சம்மந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் இப்பேராளர் மாநாடு அழைப்பு விடுக்கின்றது.

ஏலவே, இனவிகிதாரசார அடிப்படையிலான நிலப் பகிர்வில் பெரும் அநியாயம் இழைக்கப்பட்டிருக்கின்ற முஸ்லிம் சமூகத்தின் குடியிருப்பு மற்றும் விவசாய காணிகள் மீது - அரச இயந்திரத்தின் கூறுகள் மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்புக்கள் அகற்றப்படுவதோடு - புதிதாக உருவாக்கப்படும் தேசிய எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் நியாயமான பரிந்துரைக்கமைவாகவே உள்ளூராட்சி மன்ற மற்றும் பிரதேச செலக எல்லைகள் வகுக்கப்படல் வேண்டும் என இப்பேராளர் மாநாடு வலியுறுத்துகிறது.

ஈஸ்டர் குண்டுவெடிப்பு தொடர்பில் புதிதாக வெளியாகியுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு - புதிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு - பிரதான சூத்திரதாரிகள் கண்டறியப்படுவதோடு - பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மற்றும் முஸ்லிம் சமூகத்திற்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என இப்பேராளர் மாநாடு தீர்மானிக்கிறது.

ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றான நீதித்துறையின் சுதந்திரம் பேணிப் பாதுகாக்கப்படுவதோடு - சுய அரசியல் நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் நீதித்துறை மீது சேறு பூசும் நடவடிக்கைகளை இப்பேராளார் மாநாடு கண்டிக்கிறது.

பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் மேற்கொள்ளும் மனித விரோதத் தாக்குதல்கள் உடன் நிறுத்தப் படுவதோடு - குடும்பங்கள் தமது உறவுகளோடு சேரவும் - சொந்த இடங்களுக்குத் திரும்பவும் - காஸாவிற்கான மனிதாபிமான உதவிகளைப் போதியளவுக்கு வழங்குவதற்கும் இடமளிக்கப்படவேண்டும் என இப்பேராளர் மாநாடு வலியுறுத்துகிறது.

கிழங்கு ஜெருசலத்தை மையமாகக்கொண்டு - 1967களுக்கு முந்திய எல்லைகளின் அடிப்படையில் சுதந்திர பலஸ்தீனம் நிறுவப்பட்ட வேண்டும் எனவும் - ஏலவே ஐக்கிய நாடுகள் சபையின் 140 அங்கத்துவ நாடுகள் அங்கிகரித்துள்ள வண்ணம் பலஸ்தீனத்திற்கு முழு உறுப்புரிமை அந்தஸ்த்து வழங்கப்பட வேண்டும் எனவும் - காஸாவின் மீள்நிர்மானம் மற்றும் மீள் அபிவிருத்தி என்பவற்றிற்கு சர்வதேச சமூகம் நிதி உதவி வழங்கிட முன்வரவேண்டும் எனவும் இப்பேராளர் மாநாடு வலியுறுத்துகிறது.

உலகளாவிய ரீதியில் - இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான வெறுப்புணர்வைத் தூண்டும் இஸ்லாமிபோபியா பரப்புரைகளுக்கு நிதி வழங்குவதையும் - அதன் செயற்பாட்டாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதையும் குறிப்பிட்ட மேற்கத்திய நாடுகளும் பிராந்திய நாடுகளும் கைவிடுவதோடு - வெறுப்புப் பரப்புரைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் முன்வர வேண்டுமென இப்பேராளர் மாநாடு வலியுறுத்துகிறது.

## மு.கா. ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோரம்போக முடியாது. கட்சியின் தலைமை சோரம்போகுமாக இருந்தால் கட்சியே அழிந்து போய்விடும். எனவே மு.கா.வின் தலைமை சோரம்போகிற தலைமையாக இருக்கமாட்டாது. குறிப்பாக, அதிகாரத்துக்கு அடிபணிந்து சோரம்போகிற தலைமையாக ஒருபோதும் இருக்காது.

அதேபோன்று மு.காவின் தலைமையை அச்சுறுத்தி அடிபணிய வைக்க முடியாது. கட்சியின் அங்கத்தவர்களைத் தம்பக்கம் ஈர்த்து அவர்களை கட்சிக்கு எதிராக பேசவைக்கும் செயற்பாடு இனிமேலும் நடைபெறாது.

அனைவரும் உறுதியான சத்தியப்பிரமாணம் ஒன்றை எடுத்துள்ளோம். தலைமையோடும், கட்சியோடும் இனிமேல் பிணக்கில்லாது பயணிப்பது என்பதே அந்த சத்தியப்பிரமாணம் ஆகும். இது ஏகமனதாக எடுக்கப்பட்டுள்ளதாகும். அந்த தீர்மானம் உறுதியாக எழுத்து மூலமாகவும் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

## 40 வயதுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தினால் இவர்கள் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உள்ளது.

முன்னதாக இதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கு மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்தக் கால அவகாசம் இம்மாதம் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அந்த திணைக்களத்தின் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

## மட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் வஜிர அபேவர்தனவினால் வழங்கப்பட்ட சுமார் ஒரு பில்லியன் ரூபா ஒதுக்கீட்டின் கீழ் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அன்று, இத்திட்டத்தை தொடங்கி வைத்த ரணில் விக்ரமசிங்க அவர்களே இன்று ஜனாதிபதியாக இந்தக் கட்டடத்தைத் திறந்து வைத்துள்ளார்.

நாட்டின் உற்பத்தியை அதிகரிக்க விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுத்துமாறு ஜனாதிபதி

# சேறு பூசும் கீழ்த்தரமான தாக்குதலுக்கு அஞ்சோம்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் சூளுரை

கேவலமான 'டீல்'களை செய்து கொண்டு பிரபஞ்சம் மற்றும் மூச்சுத் திட்டங்களுக்கு சேறு பூசும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர், இந்த சேறுபூசும் கீழ்த்தர தாக்குதல்களுக்கு தாம் அஞ்சப்போவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 249ஆவது ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், குருநாகல், யாபஹுவ, வலஸ்வெள குணபால மலலசேகர மாதிரி பாடசாலைக்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு வங்குரோத்தடைந்து, மக்கள் வாழ்வு சீரழிந்துள்ள வேளையில், மக்கள் பிரதிநிதிகளில் ஒரு பகுதியினர் ஒன்று சேர்ந்து, மக்களுக்கு நலன் பயக்கும் பிரபஞ்சம் மற்றும் மூச்சு ஆகிய புண்ணிய திட்டங்களுக்கு சேறுபூசி அதனை எதிர்த்து வருகின்றனர். இந்த சேறுபூசும் கீழ்த்தர தாக்குதல்களுக்கு தாம் அஞ்சப்போவதில்லை

இலவசக் கல்வியை பாதுகாப்போம் என்று கூறுபவர்களின் முட்டாள்தனமான கொள்கைகளால் இலவசக் கல்வி அழிந்து வருவதனால், இலவசக் கல்வியில் ஆங்கில மொழிக் கல்வியை விரிவுபடுத்த வேண்டும். இவ்வாறு மாறத்தை ஏற்படுத்தாமல் கல்வியை மேம்படுத்த முடியாது

இன்று நாடு முழுவதும் பட்டதாரிகள் வேலை கேட்டு போராட்டம் நடத்தி வருகின்றனர். இவர்களுக்கு தனியார் துறையில் கூட வேலை கிடைப்பதில்லை. கலைப்பட்டம் அந்நிறுவனங்களுக்கு ஏற்றதல்ல இது குறித்து யாரும் பேசுவதில்லை. சிங்களம் மட்டும், தமிழ் மட்டும் என்று கூறி தத்தமது வாக்கு வாங்கிகளை அதிகரித்துக் கொள்ளவே அரசியல்வாதிகள் செயல்பட்டு வருகின்றனர்.

காலத்துக்காலம் அரசியல்வாதிகள் ஆட்சிபீடம் ஏறினாலும் 41 இலட்சம் மாணவ தலைமுறைக்கு ஏற்பட்ட மாற்றம் ஏதுமில்லை. பாடசாலை கட்டமைப்புக்குத் தேவையான வளங்களை வழங்க முடியாத ஆட்சியின் மூலம் பிள்ளைகளின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன. இலவசக் கல்வியைப் பாதுகாப்பதாகக் கூறி பாத யாத்திரை செல்லும் தரப்பினர் இலவசக் கல்வி மேம்படுவதை ஒருபோதும் விரும்புவதில்லை.

புரட்சியாளர்கள் எனக் கூறிக்கொள்ளும் தரப்பினரின் பிள்ளைகள் தனியார் பாடசாலைக்கும் சர்வதேச பல்கலைக்கழகங்களுக்குமே செல்கிறார்கள். அவர்களுக்கு தனியார் கல்வி நல்லதாக இருந்தாலும் இலவசக் கல்வி நல்லதொன்றாக அமையவில்லை.

இலவசக் கல்வியை மேம்படுத்த முயலும் போது, நாட்டின் ஏனைய பிள்ளைகளும் தமது பிள்ளைகளின் நிலைக்கு வருவார்கள் என்ற பொறாமைத்தன சிந்தனையுடனயே இவர்கள் சேறுபூசும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்றார்.

# திருகோணமலையில் இந்திய கடற்படை கப்பல்

இந்திய கடற்படையின் கமோர்டா கப்பல் கடந்த 20ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தியக் கப்பலின் கட்டளை அதிகாரி பிரசாந்த் குமார் மிஸ்ரா இலங்கையின் கிழக்கு கடற்படை தளபதிரியர் அட்மிரல் பனாகொடவை சந்தித்தார்.

இதன்போது, இந்திய உயர் ஆணையரகத்தின் 10ஆவது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு திருகோணமலை துறைமுகத்தில் விசேட யோகா நிகழ்வும் இடம்பெற்றது. இந்நிகழ்வில், இலங்கை கடற்படை அதிகாரிகள், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்திய உயர்ஆணையரகம் மற்றும் இலங்கை கடற்படையின் ஒருங்கிணைப்புடன் இந்திய கடற்படையின் கமோர்டா கப்பலானது பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வைக்காகத் திறக்கப்பட்டது.

எப்பொழுதும் எமக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த விவசாய திணைக்களத்துடன் இணைந்து செயற்படுகின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டம் அதிகளவான விவசாயிகளைக் கொண்ட விவசாய மாவட்டம் என்பதைக் கூறவேண்டும். அத்துடன் நாட்டின் மிக நீளமான கடற்கரை கிழக்கு மாகாணத்தில் அமைந்திருப்பதால் நீர்வாழ் உயிரினங்களை வளர்ப்பத்தை ஊக்குவிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஜனாதிபதி எமக்கு எடுத்துக் காட்டியுள்ளார். எனவே, மீன்வளர்ப்புத் திட்டங்களுக்கு உள்நாட்டு விவசாயிகள் மற்றும் வர்த்தகங்களை ஊக்குவிக்க நாம் தற்போது செயற்பட்டு வருகிறோம். மேலும், எங்களிடம் அதிக அளவில் கனிமப் படிவுகள் உள்ளன. அதற்கு பெறுமதி சேர்த்து, கனிமத்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் இத்திட்டங்கள் அனைத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு நாம் மிகவும் ஊக்கத்துடன் செயற்பட்டு வருகின்றோம் என்றார்.

## இருட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

ஆளும் தரப்பு முன்னெடுத்து வரும் 'உறுமய தேசிய வேலைத் திட்டத்தின்'' கீழ் மட்டக்களப்பு திராய்மடு மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்றபோது உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்த நேரத்தில், முன்னாள் ஜனாதிபதி பலருக்கும் அழைப்பு விடுத்தார். யாரும் இந்நாட்டைப் பொறுப்பேற்ற முன்வரவில்லை. அத்தியவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள மக்கள் கையில் பணம் இருந்தாலும் வரிசைகளில் பல நாட்கள் நிற்க வேண்டிய நிலை காணப்பட்டது. இந்த நாடு மீண்டும் மீண்டுவரக்கூடிய சூழல் இருக்கவில்லை. அந்நேரத்தில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க துணிச்சலாக முன்வந்து, வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை பொறுப்பேற்றார்.

இருட்டைத் திட்டுவதற்கு பலர் இருந்தாலும் இருட்டை நீக்கி

தொடர்ச்சி 9ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

## ரஷ்யாவில் உயர்கல்வி பெற்றுத்தருவதாகக் கூறி பண மோசடி செய்தவர் கட்டுநாயக்கவில் கைது

ரஷ்யாவில் உயர் கல்வி பெற்றுத் தருவதாகக் கூறி சுற்றுலா வீசா மூலம் மாணவர்களை ரஷ்யாவுக்கு அழைத்துச் சென்று ஏமாற்றி பண மோசடி செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வத்தளை, ஹுனுபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கந்தானை பிரதேசத்தில் மாணவரொருவரிடம் ரஷ்யாவில் உயர் கல்வி பெற்றுத் தருவதாகக் கூறி 21 லட்சத்து 95 ஆயிரம் ரூபா மோசடி செய்துள்ளார் என நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபருக்கு எதிராக மாத்தறை பொலிஸ் தலைமையகத்தில் 17 முறைப்பாடுகளும், குளியாப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் 2 முறைப்பாடுகளும், குருணாகல் பொலிஸ் நிலையத்தில் 3 முறைப்பாடுகளும், நாராஹென்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. மேலும், சந்தேக நபருக்கு எதிராக வாதுவை, அம்பாறை மற்றும் மொரட்டுவை ஆகிய பொலிஸ் நிலையங்களிலும் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளக என விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது. இந்நிலையில், சந்தேக நபர் உயர் கல்வி பெற்றுத்தருவதாக கூறி ஏமாற்றி ரஷ்யாவிற்கு அழைத்துச் சென்ற மாணவரொருவரை கத்தியால் குத்தி காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் சந்தேக நபருக்கு எதிராக ரஷ்யா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பின்னர், சந்தேக நபர் ரஷ்யாவிலிருந்து தப்பித்து விமானம் மூலம் வியாழக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததையடுத்து நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணை களை நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற் கொண்டு வருகின்றனர். (05)

## காதலியின் நிர்வாணப் படத்தை வட்ஸ்அப்பில் பகிர்ந்தவர் கைது

காதலியின் நிர்வாண புகைப்படத்தை வட்ஸ் அப்பில் பகிர்ந்து அச்சுறுத்தியதாகக் கூறப்படும் முன்னாள் கடற்படை சிப்பாய் ஒருவர் கணினி குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பலப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த முன்னாள் இராணுவ சிப்பாயொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பெண் ஒருவருடன் நீண்ட காலமாகக் காதல் உறவில் ஈடுபட்டிருந்துள்ள நிலையில் இந்த பெண், சந்தேக நபருடனான காதல் உறவை முறித்துக் கொள்வதற்குத் தீர்மானித்துள்ளார்.

இதனை அறிந்துகொண்ட சந்தேக நபர், காதலியின் நிர்வாண புகைப்படங்களை வட்ஸ்அப் மூலம் காதலியின் நெருங்கிய நண்பர்களுக்குப் பகிர்ந்துள்ளார்.

பாதிக்கப்பட்ட காதலி இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்ததையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார். (05)

## மன்னார் பிரதான பாலத்தடியிலுள்ள சோதனைச் சாவடி அகற்றப்பட்டது





மன்னார் மாவட்டத்தில் நீண்டகாலமாக மக்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்கிய பிரதான சோதனை சாவடி மற்றும் வீதி தடைகள் வெள்ளிக்கிழமை அகற்றப்பட்டுள்ளதுடன் சோதனை நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

பல வருடங்களாக குறித்த சோதனை சாவடியை அகற்றுமாறும் குறித்த சோதனை சாவடியால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்கள்,சிவில் செயற்பாட்டாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போராட்டங்களை முன்னெடுத்த துடன்,சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு சோதனை சாவடியை அகற்றுவதற்கான கோரிக்கையை கடிதங்களாகவும் மகஜர்களாகவும் வழங்கியிருந்தனர்.

இந்த நிலையி, அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற விசேட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் மன்னார் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் குறித்த சோதனை சாவடியை அகற்றி தருமாறு நேரடி கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையில் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக குறித்த பாலப் பகுதியில் காணப்பட்ட வீதி தடைகள் அகற்றப்பட்டுள்ளதுடன் சோதனை நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இருப்பினும், அப்பகுதியில் இராணுவம் தொடர்ச்சியாக நிலை கொண்டுள்ளதுடன் இராணுவ கட்டுமானங்கள் எவையும் அகற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## நெடுந்தீவில் கொலை செய்யப்பட்ட இளைஞருக்கு நீதி வேண்டி பொலிஸ் நிலையம் முன் கவனவீர்ப்பு









நெடுந்தீவு பகுதியில் கொலை செய்யப்பட்ட இளைஞருக்கு நீதி வேண்டி நெடுந்தீவு பொலிஸ் நிலையம் முன் மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வியாழக்கிழமை அதிகாலை நெடுந்தீவு ஏழாம் வட்டாரத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் அடித்து கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

பிரேத பரிசோதனையின் பின் வியாழக்கிழமை இரவு சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்ட நிலையில் வெள்ளிக்கிழமை இறுதி கிரிகைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று அதன் பின்னர் நல்லடக்கத்திற்காக சேமக்காலைக்கு எடுத்துச் செல்லும் போது மக்கள் சடலத்தையும் தோள்களில் சுமந்தவாறு நெடுந்தீவு பொலிஸ் நிலையம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வியாழக்கிழமை நடைபெற்ற இளைஞர் கொலையுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர் ஒருவர் ஏற்கனவே வியாழகக்கிழமை கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில் இக்கொலையுடன் சம்பந்தப்பட்ட ஏனைய மூவரையும் விரைவாகக் கைது செய்யுமாறு கோரி நெடுந்தீவு மக்கள் சடலத்துடன் சென்று நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது பொலிஸாரின் அசமந்த போக்கைச் சுட்டிக்காட்டிய மக்கள் பொலிஸாரிடம் வாய்த்தர்க்கத்திலும் ஈடுபட்டனர்.

அதன் பின்னர் கலைந்து சென்ற மக்கள் கொலை செய்யப்பட்ட இளைஞரின் சடலத்தை சேமக்காலையில் நல்லடக்கம் செய்தனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முன்னெச்சரிக்கை அடைவோம்!

இலங்கை பறவைக் காய்ச்சல் தொடர்பில் விழிப்புடன் இருக்கவேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு (WHO) அறிவுறுத்தியுள்ளது. அண்டை நாடான இந்தியாவில் பறவைக் காய்ச்சல் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பறவைக்காய்ச்சல், இன்ஃப்ளுயன்ஸா வைரஸ்களால் ஏற்படும் ஒரு தொற்று நோய், இது முதன்மையாக பறவைகளை பாதிக்கிறது, ஆனால் பறவைகளில் இருந்து மற்ற விலங்குகள் மற்றும் மனிதர்களையும் பாதிக்கலாம்.

இன்ஃப்ளுயன்ஸா வைரஸ்களின் பல்வேறு விகாரங்களால் இந்த நோய் ஏற்படலாம், பொதுவாக எச்5 (H5) மற்றும் அதன் துணை வகைகளால் குறிப்பிடப்படும் இந்த வைரஸ்கள், மனிதர்களுக்குத் தொற்றும்போது வேகமாகப் பரவும் இயல்பைக் கொண்டிருக்கும். பெரும்பாலான எச் 5 திரிபுகள் லேசான பாதிப்பை மட்டுமே ஏற்படுத்தும் என்றாலும் சில திரிபுகள் இறப்புக்களையும் ஏற்படுத்தும்.

இந்தியாவின் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த ஒரு குழந்தைக்கு ஏவியன் இன்ஃப்ளுயன்ஸா பு (H9N2) வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக இந்தியா சமீபத்தில் தெரிவித்தது. இது இந்தியாவில் மனிதர்களில் பறவைக் காய்ச்சல் தொற்றுக் கண்டறியப்பட்ட இரண்டாவது சம்பவமாகும். இதற்கு முன்னர் 2019இல் இவ்வாறு நிகழ்ந்தது. அந்தக் குழந்தைக்கு கோழிப் பண்ணைச் சூழலுடன் தொடர்பு இருந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. தற்போது குழந்தை குணமடைந்து வருகின்றது.

சமீகாலத்தில், மே 2024இல், ஆஸ்திரேலியாவில்தான் முதலாவது பறவைக் காய்ச்சல் நோய் கண்டறியப்பட்டது. குறிப்பாக எச்5என்1 (H5N1) திரிபு தொற்றப்பட்ட ஒருவர் கண்டறியப்பட்டார். அதன் பின்னர் அமெரிக்காவிலும் சிலருக்கு இந்த நோய் தொற்றியிருப்பது கண்டறியப்பட்டது. டெக்சாஸ் மற்றும் மிச்சிகனில் உள்ள கறவை மாட்டுப் பண்ணையுடன் தொடர்புடையவர்கள் அவர்கள்.

இதுவரையில் இந்த நோய் மனிதனுக்கு மனிதன் தொற்றியதாக எந்தத் தகவலும் பதிவாகவில்லை விலங்குகளில் இருந்து மனிதர்களுக்குப் பரவியதாகத்தான் கண்டறியப்பட்டுள்ளது.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் (MRI) ஆலோசகர் வைராலஜிஸ்ட் மருத்துவர் ஜூட் ஜயமஹா இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், பறவைக் காய்ச்சலின் பல்வேறு விகாரங்களாக மாறும் திறன் கவலையளிப்பதாகத் தெரிவித்தார்.

பறவைக் காய்ச்சலைக் கண்டுபிடிக்கும் திறன் இலங்கைக்கு இருக்கின்றது என்றும் வழமையான இன்புளுவென்ஸா பரிசோதனைகள் ஊடாகவே பறவைக் காய்ச்சாலைக் கண்டறியமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

வைரஸ் பற்றி மேலும் தெளிவுபடுத்திய டாக்டர் ஜெயமஹா, பறவைகள் தங்கள் உமிழ்நீர், சளி மற்றும் மலம் ஆகியவற்றில் வைரஸை வெளியேற்றுவதாகவும், அதன் விளைவாக, பாதிக்கப்பட்ட பறவைகள் அல்லது அசுத்தமான சூழலில் நெருங்கிய, பாதுகாப்பற்ற தொடர்பு கொண்ட மக்கள் அல்லது விலங்குகள் பாதிக்கப்படலாம் என்றும் சுட்டிக்காட்டினார்.

கொரோனாவால் சமூக, பொருளாதார ரீதியில் ஏற்பட்ட பாதிப்பில் இருந்து இன்னும் மீண்டுவரமுடியாது துன்பப்படும் இலங்கையில் பறவைக் காய்ச்சல் ஏற்பட்டால் நிலமை விபரீதமாகும். எனவே வருமுன் காக்கும் வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுத்து முன்னெச்சரிக்கையுடன் இருப்போம்.




# 2024 இந்திய தேர்தல் முடிவு: 10 முக்கிய அம்சங்கள்

**பார்த்த எஸ். கோஷ்**



இந்திய மக்களவைத் தேர்தல்களில் 1977 ஒரு திருப்புமுனை என்றால், 2024ஆம் ஆண்டும் அதைப் போன்ற முக்கியமான திருப்புமுனையே, இரண்டிலும் அளவில் பரிமாணங்கள் வேறாக இருந்தாலும். 'இந்தியாதான் இந்திரா - இந்திராதான் இந்தியா' என்ற காங்கிரஸின் முழக்கத்தை 1977இல் நிராகரித்த மக்கள், 2024இல் 'மோடியின் உத்தரவாதம்' என்ற வாதத்தையும் நிராகரித்துவிட்டனர்.

பாஜகவுக்கு மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுத் தந்துவிடுவார் மோடி, அவரது மாயாஜாலம் இதை நிகழ்த்திக்காட்டும் என்பது நிறைவேறவில்லை. இந்தத் தேர்தல் முடிவு வருவதற்கு முன்னால் பாஜகவில் ஒருவர்கூட 'தேசிய ஜன நாயகக் கூட்டணி' என்ற பெயரை உச்சரிக்கவே இல்லை, எல்லோருடைய பேச்சும் 'பாஜக - பாஜக' என்றே இருந்தது.

2024 தேர்தல் முடிவுக்குப் பிறகு, 'பாஜக' என்பது மறைந்து 'தேசிய ஜனநாயகக் கூட்டணி' (தேஜகூ) என்றே பேசப்படுகிறது. 'பாஜக' என்ற வார்த்தையை 'தேஜகூ' என்பதைக் கொண்டு நிரப்பிவிட்டார்கள். 'மமதை மாமன்னர் சென்றுவிட்டார் - மாமன்னர் நீடுழி வாழ்க!'

இந்தத் தேர்தல் உணர்த்தியுள்ள மாற்றம் அல்லது நாட்டு அரசியல் பெற்றுள்ள பயன்கள் வருமாறு:

### முதலாவது

ராகுல் காந்தி ஆட்ட நாயகனாகிவிட்டார். இனி ஒவ்வொரு கட்டத்திலும் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக அவருடைய பங்களிப்பு முக்கியத்துவம் பெறும். இதற்கு முன்னால் அவரை ஏளனம் செய்து ஒதுக்கியதைப் போல இனி அலட்சியப்படுத்த முடியாது. ஆர்எஸ்எஸ், மோடி ஆதரவு ஊடகங்கள் (கோடி மீடியா), சலுகைசார் முதலாளித்துவம் (அதானி - அம்பானி), ஆகியவற்றை இடைவிடாமல் தாக்கியதில் காட்டிய தீவிரம், அவரை நீண்ட கால அரசியலுக்குத் தயார் செய்துவிட்டது.

ராய்பரேலி மக்களவைத் தொகுதியில் அவர் வென்றது பெரிய விஷயமே அல்ல, மத வெறிக்கு எதிராக உறுதியுடன் நின்று மோடிக்கு எதிராக நாடு முழுவதும் வலிமையான அலையை உருவாக்கி, மதவாதத்தை அதன் கொம்புகளைப் பிடித்தே அடக்கிவிட முடியும் என்று காட்டியிருக்கிறார். "மத வெறுப்பை விற்கும் கடை வீதியில், அன்பை விற்கும் கடையைத் திறக்கிறேன்" என்ற அவருடைய முழக்கம் வெற்றிகரமாக வேலை செய்துவிட்டது.

### இரண்டாவது

ராகுலின் இந்த உறுதியான எதிர்ப்பு ஏழை இந்துக்களுக்கு மட்டுமல்ல, முஸ்லிம்களுக்கும் உரமூட்டி, சுயநல எண்ணம் கொண்ட அவர்களுடைய சமூகத் தலைவர்களுக்கு எதிராகவும் எதிர்த்து நிற்க உதவியது.

அசாமில் முஸ்லிம்களைக் கொண்டு அரசியல் நடத்திய பத்ருதீன் அஜ்மலை, துப்ரி தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட தலைவர் ரபிகுல் உசைன் 10.12 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்திருப்பது சாதாரண வெற்றியல்ல. 2009, 2014, 2019 மக்களவை பொதுத் தேர்தல்களில் தொடர்ந்து வெற்றிபெற்ற அஜ்மல், உண்மையில் அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வ சர்மாவின் 'பதிலி' (பிராக்ஸி) என்று இந்தத் தேர்தலில் அவர் செய்த பரப்புரை நன்கு கைகொடுத்தது.

### மூன்றாவது

பட்டியல் இனத்தவர்களுடைய அரசியல் இனி மிகப் பெரிய மாற்றத்தைக் காணப்போகிறது. பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதிக்குப் பதிலாக புதிய தலைமை தோன்றிவிட்டது. 'பாஜகவுடன் இரகசியமாகக் கூடிக் குலாவும் மாயாவதி, இந்தியா கூட்டணிக் கட்சி வேட்பாளர்களைத் தோற்கடிக்க ஆங்காங்கே வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறார்' என்று பரவலாக பேசப்பட்டது. 'ராவணன்' என்று அழைக்கப்படும் சந்திரசேகர் ஆஸாத் புதிய 'தலித்' தலைவராக உருவெடுத்திருக்கிறார்.

உத்தர பிரதேசத்தில் பட்டியல் இனத்தவர்களுக்காகவே ஒதுக்கப்பட்ட நாகினா தொகுதியில், நான்கு முனைப் போட்டியில் பாஜக, சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ் வேட்பாளர்களைத் தோற்கடித்தார். அவர் மொத்தமாகப் பெற்ற 5,12,552 வாக்குகளை பாஜக (3,61,079), சமாஜ்வாதி (1,02,374), பகுஜன் சமாஜ் (13,272) வேட்பாளர்கள் மூன்று பேர் சேர்ந்தும்கூடப் பெறவில்லை.

### நான்காவது

'ஒரே நாடு - ஒரே தேர்தல்' என்ற முழக்கம் இனி அபஸ்வரமாகவே இருக்கும். அனைத்து கூட்டணி அரசுகளுமே, வெவ்வேறுபட்ட அரசியல் கொள்கைகள், கண்ணோட்டங்கள் காரணமாக தோழமைக் கட்சிகளின் அனைத்து முடிவுகளையும் அப்படியே ஏற்றுக்கொள்ளாது. எனவே, மோடியின் இந்த லட்சிய முழக்கம் இனி மூலையில் தூக்கி வீசப்படும்.

ஆட்சியில் நீடிக்கவே நரேந்திர மோடி இனி ஆந்திரத்தின் தெலுங்கு தேசம், பிஹாரின் ஐக்கிய ஜனதா தளம் - லோக் ஜனசக்தி ஆகிய அரசியல் கட்சிகளைப் பெரிதும் நம்பியிருக்க வேண்டும். இந்தக் கட்சிகள் கூட்டரசின் கொள்கையை பாஜக வலுவிழக்கச் செய்ய அனுமதிக்காது. இனி 'இந்தி - இந்து - இந்துஸ்தானம்' என்ற முழக்கங்கள் ஈன ஸ்வரத்தில்கூட கேட்காது.

### ஐந்தாவது

இந்தியா கூட்டணி ஏற்படுத்திய மதச்சார்பின்மைக்கு ஆதரவான அலையால், அயோத்தி ராமர் கோயில் அமைந்துள்ள ஃபைசாபாத் மக்களவைத் தொகுதியிலேயே சமாஜ்வாதி வேட்பாளர் அவதேஷ் பிரசாத், பாஜக வேட்பாளரை தோற்கடித்துவிட்டார். 'பாசி' என்ற பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த அவதேஷ் பிரசாத், பொதுத் தொகுதியான ஃபைசாபாதில் பாஜகவை மண்ணைக் கவ்வ வைத்திருப்பது இரட்டைத் தாக்குதலாகும்.

இந்துத்துவ முழக்கமானது பட்டியல் இனத்தவரால் தகர்த்தப்பட்டிருப்பது, அதுவும் - உத்தர பிரதேசத்தில் சாதாரண செயல் அல்ல. 'ந மதுரா ந காசி, அப்கி பார் அவதேஷ் பாசி' (இனி மதுராவும் இல்லை - காசியும் இல்லை, இந்த முறை அவதேஷ் பாசி) என்று அதற்குப் பொருள்.

### ஆறாவது

தேர்தலுக்குப் பிறகு வெளியிடப்படும் 'வாக்குக் கணிப்பு' (Exit Poll) முடிவுகளை மக்கள் இனி

(10ஆம் பக்கம் பார்க்க..)

# கண்டி, யாழ். உள்ளிட்ட பல இடங்களில் 10 ஆவது சர்வதேச யோகா தின நிகழ்வு





கடந்த வெள்ளிக்கிழமை 10 ஆவது சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது.

இந்நிலையில், 10 ஆவது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இலங்கையில் உள்ள பல்வேறு பிரதேசங்களில் 10 நாள்கள் யோகா 'மஹோத்சவம்' நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது.

இலங்கையின் சுற்றுலா அமைச்சுடன் இணைந்து இந்திய உயர்ஸ்தானிகராலயம் இந்த யோகா நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யோகா நிகழ்வானது இலங்கையின் சுற்றுலாத் தளங்களான கண்டி ஏரி, யாழ்ப்பாணம் நல்லூர் கந்த சுவாமி கோவில் நுழைவாயில், குருணாகல், யாழ்ப்பாணத்திலுள்ள மந்திரி மனை, பத்தேகமவிலுள்ள கிறிஸ்ட் சர்ச் பெண்கள் பாடசாலை, பொரள்ளை தேசிய ஆயுர்வேத போதனா வைத்தியசாலை, வெல்லவாய தேசிய இளைஞர் படையணி நிலையம் ஆகிய இடங்களில் நடைபெற்றது. (05)



# விசேட சுற்றிவளைப்பில் ஐவர் யாழ். குருநகரில் கைதாகினர்

யாழ்ப்பாணம் - குருநகரில் பொலிஸார் நடத்திய விசேட சுற்றிவளைப்பு சோதனையின் போது ஐவர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த சோதனை நடவடிக்கை வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

பொசன் தினத்தில் அரச மதுபானங்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவரும் ஹெரோயின் போதைப் பொருளுடன் இருவரும், கஞ்சா கலந்த மாவாவுடன் இருவரும் கைது செய்யப்பட்டனர். இதன் போது 19 மதுபான போத்தல்கள், 70 மில்லிகிராம் ஹெரோயின், 80 கிராம் கஞ்சா கலந்த மாவா என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (05)

# நுவரெலியாவில் யோகாதின நிகழ்வு



(பி.கேதீஸ்)

சர்வதேச யோகா தினத்தையொட்டி சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம், இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயம், ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் ஆவெலியா, ஸ்ரீசீதையம்மன் ஆலயம், மாநகரசபை நுவரெலியா,பிரமகுமாரிகள் யோகா நிலையம் மற்றும் சிவா விஸ்ணு யோகா பீடம் ஆகியோரின் ஏற்பாட்டில் நுவரெலியா சினிசிட்டா உள் அரங்கில் யோகா நல்லிணக்க விசேட நிகழ்ச்சியொன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர் சுனித்தா பீமேகெதர , ஆங்கில கல்வி உதவிப் பணிப்பாளர் சாந்தகுமார், முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினர்களான இராஜாராம், சிவஞானம், சிவா விஸ்ணு யோகா பீட பணிப்பாளர் ராஜ்குமார் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். கல்லுண்டாய் பகுதி மக்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம்






பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம், கல்லுண்டாய் பகுதி மக்கள் அவர்களது குடியேற்ற திட்டத்திற்கு அருகில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில் -

கல்லூண்டாய் குடியேற்றத்திட்ட பகுதியில் ஜே/135, ஜே/136 என இரண்டு கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. ஆனால் மொத்தமாக 88 குடும்பங்கள் தான் வசிக்கின்றன. ஜே/135 கிராம சேவகர் பிரிவில் சுமார் 27 குடும்பங்கள் தான் உள்ளன. ஏனையோர் ஜே/136 கிராம சேவகர் பிரிவில் தான் உள்ளனர்.

இரண்டு கிராமங்களையும் பிரிப்பதற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் அனுமதியுடன், ஜேர்மனியை சேர்ந்த பெண் ஒருவரின் நிதியில் கட்டடம் ஒன்று கட்டப்படுகிறது. இந்த கட்டடம் ஜே/135 பகுதியைச் சார்ந்ததாகவே உள்ளது. இதனால் ஜே/136 பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த கட்டடம் யாருக்காக, எந்த நோக்கத்திற்காக, எந்த நிர்வாகத்தின் கீழ் கட்டப்படுகின்றது என்ற எதுவும் எமக்குத் தெரியாது. இதுகுறித்து கிராம சேவகரை கேட்டபோது, அது சம்பந்தமான எந்தவொரு உத்தியோகபூர்வ தகவலும் தனக்கு வழங்கப்படவில்லை என கூறுகிறார். - என்றனர்.

சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரே இதில் தலையிட்டு குழப்பத்தை ஏற்படுத்துகின்றார். கிராம சேவகரா சமுர்த்தி உத்தியோகத்தரா என்ற குழப்பத்தில் நாங்கள் உள்ளோம். இரண்டு பகுதி மக்களும் சந்தோஷமாக இருந்தோம். ஆனால் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் இரண்டு பிரிவு மக்களையும் பிரித்து பிரச்சினையை உண்டாக்குகின்றார்.

சமுர்த்தி உத்தியோகத்தர் தனது அலுவலகத்தில் இருக்காமல் ஜே/135 கிராம சேவகர் பிரிவில் உள்ள சில பெண்களின் வீடுகளுக்குள் இருந்து கதைத்துக்கொண்டு இருக்கின்றார். ஏதாவது தேவைக்கு அலுவலகத்துக்கு சென்றாலும் அங்கு சமுர்த்தி உத்தியோகத்தர் இல்லை.

சமுர்த்தி உத்தியோகத்தருக்கு இடமாற்றம் கிடைத்தும் கூட அவர் செல்லாமல் இருக்கின்றார். இரண்டு கிராம சேவகர் பிரிவுகளையும் இணைத்து சந்தோஷமாக செயற்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை. - என்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாதைகளை ஏந்தி கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(05)

# கட்டாக்காலி மிருகங்களுக்கு மன்னாரில் உணவு தானம்




பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு மன்னாரில் கட்டாக்காலி மிருகங்களுக்கு உணவு தானம் வழங்கப்பட்டுள்ளது.

மன்னாரில் நாய்கள், கழுதைகள், குரங்குகள், பூனைகள் மற்றும் காகங்களுக்கு மரக்கறிகள், சோறு வழங்கப்பட்டுள்ளது.

விலங்குகள் மனிதநேய முகாமைத்துவ சங்கத்துடன் வெட் ஒப் பியுச்சர், வன் மீல், மில்லியன் லைவ்ஸ், பிரிட்ஜிங் லங்கா மற்றும் ஹெனட்ரோ அனிமல் ரெஸ்க்யூ ஆகிய அமைப்புகளும் இணைந்து இந்த தானம் வழங்கும் நிகழ்வை நடத்தியுள்ளன. (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## இருட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிச்சத்தைக்கொண்டுவரஒருவர் தேவை. அந்த ஒருவராக ஜனாதிபதி இந்த நாட்டைப் பொறுப்பேற்றார். அவரின் தலைமைத்துவத்தடன் முன்னெடுக்கப்பட்ட கூட்டு முயற்சியால் படிப்படியாக பொருளாதாரம் எழுச்சி கண்டு வருவது மிகவும் பாராட்டுக்குரியது.

நாடளாவிய ரீதியில் உறுமய காணி உறுதிப்பத்திரம் வழங்கும் பெரும் திட்டத்தை ஜனாதிபதி செயற்படுத்திவருகின்றார். இதுவரை வசித்து வந்த காணிகளுக்கு உரிமையற்றவர்களாக மக்கள் இருந்தனர். ஆனால் தற்போது அந்த உரிமை மக்களுக்கே வழங்கப்படுகிறது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கும் மக்கள் பிரதிநிதிகள் உட்பட அரச அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். இன்று ஆசிரியர் நியமனங்களும் வழங்கப்பட்டன. இதன்மூலம்மட்டக்களப்புமாவட்டம் கல்வித்துறையில் மேலும் வளர்ச்சியடையும் - என்றார்.

## மட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது குறித்து உடனடியாக ஆராய்ந்து அறிக்கை வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அத்துடன், தேவாலயத் தின் திருத்தப் பணிகளை ஜனாதிபதி அலுவலகத்தின் நிதி ஒதுக்கீட்டில் துரிதமாக பூர்த்திசெய்யநடவடிக்கை எடுக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

அந்த நடவடிக்கைகளுக்கு இலங்கை இராணுவத்தின் ஆதரவைவழங்குமாறும்ஜனாதிபதி இராணுவத் தளபதிக்கு பணிப்புரை விடுத்தார். கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனும் இச்சத்தர்ப்பத்தில் ஜனாதிபதியுடன் இருந்தனர்.

## மோசமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜாங்கஅமைச்சர்சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஆளும் தரப்பு முன்னெடுத்து வரும் 'உறுமய தேசிய வேலைத் திட்டத்தின்'' கீழ் மட்டக்களப்பு திராய்மடு மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்ற காணி உறுதி வழங்கும் நிகழ்வின்போது உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு மிக மோசமான பொருளாதாரச் சிக்கலில் இருந்தபோது நாட்டைப்பொறுப்பேற்று ஜனாதிபதி பல கொள்கைகளை நடைமுறைப் படுத்தியுள்ளார். இந்தக்கொள்கைகள் நீடித்து நிலைக்கவேண்டுமாயின், மக்களும் உறுதியான மனநிலையுடன்இருக்கவேண்டும். குறிப்பாக சம்பள உயர்வுகளைக் கோரிஆங்காங்கேஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகின்றன. நாடு மிக மோசமானபொருளாதாரநிலையில் இருக்கும்போது, எவ்வாறு வேலை வாய்ப்புக்களை வழங்குவது, சம்பள உயர்வுகளை வழங்குவது என்ற கேள்வி இருக்கிறது.

இந்த நாட்டைக் கட்டியெழுப்பி, எதிர்கால இளைஞர்களுக்கு நம்பிக்கை கொடுக்கவேண்டும். இன்னமும் கடன் வாங்கிப் பயணிக்கப் போகிறோமா, அல்லது நாட்டைச் சரியாக நிர்வகித்து, சரியான எதிர்காலத்தை ஏற்படுத்தப்போகிறோமாஎன்பதைச் சிந்திக்கவேண்டும். இதற்காகவே ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியுள்ளோம். தூரநோக்குடன் செயல்பட்டு, பொருளாதாரத்தில்நீடித்துநிலைக்க நாம் பணியாற்றி வருகிறோம்.

இந்த நிலைமையைத் தொடர்ந்துமுன்னெடுக்கவேண்டிய பெரும் பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. மட்டக்களப்புமாவட்டம் மண்ணோடும், கடலோடும் சொந்தப் பொருளாதாரத்தில் நிற்கும் ஒரு மாவட்டம். இங்கு நீர்ப்பாசனத் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கான பணிப்புரைகளை ஜனாதிபதி வழங்கியுள்ளார். இதனால் ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற வேண்டியது மிக முக்கியமான விடயம். இதனைத் தவிர மாற்று வழிகள் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. உறுதியான தளம் இல்லாமல் நாங்கள் கட்டடம் கட்டமுடியாது. எனவே, அரசியல் ரீதியாக எதிர்காலத்தில் சரியான முடிவுகளை எடுத்துநாட்டிற்காகநல்லதலைவரை மக்கள் தெரிவுசெய்வார்கள் என்று நம்புகிறேன் - என்றார்.

## ரணிலுக்கே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரகாந்தன் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பொன்றுநேற்றுமட்டக்களப்பில் உள்ள கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்றது. இதன்போது சிவநேசத்துரை சந்திரகாந்தன் மேலும் தெரிவிக்கையில்,

இன்று ஒரு வரலாற்று முக்கியத்துவமிக்கதொருநாளாகும். கிழக்கு மாகாணத்தின் தமிழ் மக்களின்தலைவிதியிலும்எதிர்கால அபிவிருத்தியிலும் ஒரு புள்ளியாக அமையும் என்பதில் ஐயமில்லை. எமது மாவட்டம் உட்பட கிழக்கு மாகாணம் விவசாயம் மற்றும் மீன்படித்துறையைஅடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்தமாகாணத்தில் இருக்கின்ற பொருளாதார வளங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றால் நிச்சயமாக ரணில் விக்ரமசிங்கவுடன் ஒன்றிணைய வேண்டும். ஏனென்றால் இங்கு உள்ள வளங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற கொள்கையோடு அவர் இருக்கின்றார். அதனால்தான் நாம்அவருக்குஒத்துழைப்புவழங்கி வருகின்றோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத்தீர்வுகளைமாகாணசபை மூலம்இயன்றளவுவழங்குவதுடன் அதிகாரங்களைவழங்க வேண்டும் என்று வெளிப்படையாகக் கூறுகின்றார். எமது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்காலத்தில் இந்த தீர்வுகளைப் பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. எனவே அதற்கு அவசியமான சூழலையும் சந்தர்ப்பத்தையும் உருவாக்கிக் கொடுக்கும் பொறுப்பு எமக்கு இருக்கின்றது. தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி நிலையிலும் கூட மட்டக்களப்பு மாவட்டத்தின் வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு அவசியமான நிதிகளை ஒதுக்கித் தந்துள்ளார். நாம் அவற்றுக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

நாட்டின் நிர்மாணத்துறை, உற்பத்தித் துறை, விவசாய நவீனமயமாக்கல், மீன்படித்துறை, தொழில்நுட்பத் துறை மற்றும் யுஜ தொழிநுட்பம்போன்றவற்றைஉயர் மட்டத்திற்கு கொண்டு வரக்கூடிய ஆற்றல், அறிவு மற்றும் திட்டமிட்ட அடிப்படையில் பணியாற்றக்கூடிய தலைவராகஜனாதிபதிஇருக்கின்றார். இவற்றை முன்னேற்றும் வேலைத்திட்டங்களை அமுலாக்கக் கூடிய நிர்வாக வாய்ப்பை பெற்றுக்கொடுத்தால் மண்ணை நம்பி வாழும் கிழக்கு மாகாண மக்கள் நிச்சயமாக சொந்தக் காலில் நிற்பார்கள். எமதுஅழைப்பையேற்று எமது அலுவலகத்திற்கு வருகை தந்தமைக்காக ஜனாதிபதிக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்கிறேன் என்றார்.

## அபிவிருத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு ஐசிரி (ICT) ரத்னதீப ஹோட்டலில் நடைபெற்ற 31ஆவது அகிலஇந்தியபங்காளித்துவக்கூட்டம் 2024 இல் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற 31 ஆவது 'அகிலஇந்தியபங்காளித்துவக்கூட்டம் - 2024', இந்தியாவின் கேபிஎம்ஜி (KPMG) மற்றும் இலங்கையின் ஓபிஎம்ஜி (நுஊணனிறூ) ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்திய-இலங்கை இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதன் மூலம் சமூக -பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட ஒத்துழைப்புத் திட்டங்களுக்கு இரு நாடுகளுக்கும் இடையே தற்போதுள்ள அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தி நடைபெற்ற இக்கூட்டத்தில் 600இற்கும் மேற்பட்ட இந்திய பங்காளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்ததாவது:

கடினமானகடந்தஇரண்டுவருட காலப் பகுதியில் இந்தியா வழங்கிய 3.5 பில்லியன் டொலர் கடன் உதவி, எமக்கு பலமாக அமைந்தது. அந்தப் பணத்தை திருப்பித்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். மேலும், பங்களாதேஷ் எங்களுக்கு வழங்கிய 200 மில்லியன் டொலர் கடனை நாங்கள் ஏற்கனவே செலுத்திவிட்டோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர்கள் குழுவுடனான பேச்சுக்களை வெற்றிகரமாக முடித்துள்ளோம். எங்களின் உத்தியோகபூர்வ கடனாளிகள் குழு, அடுத்த வாரம் கூடவுள்ளது. எமக்கு கடன் வழங்கிய நாடுகளின் பிரதிநிதிகள், பாரிஸ் கிளப் மற்றும் இந்தியா ஆகிய தரப்பினரை சந்திக்க நாங்கள் தயாராக உள்ளோம். மேலும், சீனா மற்றும் சீனா எக்சிம் வங்கியுடனும் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம்.

அதன் பிறகு, எங்களுக்குக் கடன் வழங்கிய நாடுகளுடனும், சீனாவின் எக்சிம் வங்கியுடனும் ஒப்பந்தம்செய்து கொள்ளத்தயாராக உள்ளோம். அதன்படி, வரும் புதன் கிழமை உத்தியோகபூர்வ கடனாளிகள் குழுவை (நுளீஉ) சந்திப்போம். அடுத்த வாரம் அல்லது அதற்குள், ஒரு நாடாக நாம்வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டுஅடுத்தகட்டத்திற்குச்செல்ல முடியும் என்று எதிர்பார்க்கிறேன். ஆனால்இத்துடன்இந்தப்பிரச்சினை

தொடர்ச்சி 9ம் பக்கம்....

# பிரதான பொருளாதார மையமாக திருமலையை விருத்தி செய்ய திட்டம்

## ஜனாதிபதி நேற்று மட்டக்களப்பில் தெரிவிப்பு

நாட்டுமக்களுக்குஉரிமைகளைவழங்குவதேதனது பிரதான நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். அத்துடன் திருகோணமலையை பிரதான பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்ய தீர்மானித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஆளும்தரப்பு முன்னெடுத்து வரும் 'உறுமய' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 27,595 குடும்பங்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு, திராய்மடு மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்றபோது உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

திருகோணமலையை பிரதான பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்யத் தீர்மானித்துள்ளோம். அண்மையில்இந்தியவெளிவிகாரஅமைச்சர்இலங்கை வந்தபோது அதற்கு இந்தியாவின் ஆதரவைப் பெறுவது குறித்து விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது. விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் இந்தப் பகுதிகளில்பெருமளவிலான விவசாய செயற்பாடுகளைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளோம். மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையில்அபிவிருத்திசெய்யப்படாதமகாவலி காணிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டமும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வெருகலாறு முதல் அறுகம்பே வரையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மட்டக்களப்பு கோட்டையை தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் சுற்றுலாத்துறைக்காக அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் இந்தப் பிரதேசத்திற்கு ஒரு சிறந்த ஹோட்டல் கிடைக்கும்.

இப்பகுதியில் பால் உற்பத்தித் துறையை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு பொருளாதார மாற்றச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், பெரும் பணிகள் இங்கு செயல்படுத்தப்பட உள்ளன. இதன்படி திருகோணமலையை பிரதான ஏற்றுமதி பொருளாதா மையமாக மாற்ற முடியும்.

கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஆகிய இரண்டும் இங்கு அமைந்துள்ளன. இப்பிரதேசத்தில் கல்வியை மேலும் மேம்படுத்ததிட்டமிட்டுள்ளோம். தொழிற்கல்வித்துறையின் சீர்திருத்தத்தின் மூலம் அதிகளவான இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வாய்ப்புகளை வழங்க முடியும். மூன்று, நான்கு ஆண்டுகளாக ஆசிரியர்களை நியமிக்க முடியாததால், பாடசாலைக் கல்வி மேம்பாட்டிற்காக, இன்று ஆசிரியர் நியமனமும் வழங்கப்பட்டது.

நம் நாட்டில் வேலையில்லா திண்டாட்டம் ஒரு பெரும் பிரச்சினையாக மாறிவிட்டது. அதற்கேற்ப, புதிய அபிவிருத்தித்திட்டத்தின்மூலம்இளைஞர்களுக்குவேலை வாய்ப்புகளை உருவாக்கவேண்டும். நாங்கள் மிகவும் கடினமான நேரத்தை எதிர்கொண்டோம். இந்நாட்டின் சாதாரண மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடு மீண்டும் அபிவிருத்தி அடையும் போது அந்த மக்களை ஒருபோதும் மறக்க மாட்டோம்.

அதன்படி மக்களுக்கு முழு உரிமையுள்ள காணி உரிமை வழங்கும் உறுமய திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். இப்போது உங்களுக்கு ஒரு நிலத்தின்சட்டபூர்வஉரிமைஉள்ளது. யாரும்அடிபணிந்து வாழத் தேவையில்லை. குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு 'அஸ்வெசும' நிவாரணத் திட்டத்தை செயல்படுத்தினோம். தற்போது விவசாயிகளுக்கு காணி உரிமை வழங்கப்பட்டுள்ளது. இப்பகுதிக்கு 27 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படஉள்ளன. இந்தக்காணிஉறுதிப்பத்திரங்களை வினைத்திறனாக வழங்க சம்பந்தப்பட்ட அனைத்து அரச அதிகாரிகளையும் கிராமங்களுக்கு அனுப்புவதற்கான வேலைத்திட்டத்தையும் நாங்கள் தயாரித்துள்ளோம்.

அப்போது, இந்த காணி உறுதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் மாவட்ட செயலகத்திற்கோ பிரதேச செயலகத்திற்கோ செல்லத் தேவையில்லை. மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், காணி உத்தியோகத்தர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆளுநர் ஆகியோர் கிராமத்திற்குச் சென்று காணி உறுதிகளை மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்வார்கள். எதிர்வரும் திங்கட்கிழமை அந்த வேலைத்திட்டத்தை தொடங்கி விரைவில் நிறைவுசெய்ய அறிவுறுத்தியுள்ளேன். எனக்கு ஒரே ஒரு குறிக்கோள் தான் உள்ளது. அந்த உரிமையை மக்களுக்கு வழங்கவேண்டும். காணி உரிமையை பாதுகாக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

# இனப்பிரச்சினைத் தீர்வுக்காகவும் அனைவரும் இணையவேண்டும்

## ஜனாதிபதி அழைப்பு

பொருளாதாரத்தைக்கட்டியெழுப்புவதுடன் இனப்பிரச்சினைக்கும் நிரந்தரதீர்வுவழங்கப்படும்அதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும்என்றுஜனாதிபதிரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்களுக்கு இடையிலானசந்திப்பொன்றுநேற்று மட்டக்களப்பில் உள்ள கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க அங்கு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

நாட்டில் வலுவான பொருளாதாரத்தை உருவாக்கும் அதேவேளையில், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண நாம் பாடுபட வேண்டும். மேலும், இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். கிழக்கு மாகாணம் வளர்ச்சி குறைந்த மாகாணமாகும். அடுத்த 05 வருடங்களிலும்கூட இந்த மாகாணத்தைஅபிவிருத்திகுறைந்த மாகாணமாககைவிட்டுவிடமுடியாது. எனவே கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான வேலைத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதன்போது மக்களின் வருமான நிலையை உயர்த்த வேண்டும்.

நாட்டின் வளர்ச்சியடையாத ஏனைய மாகாணங்களை அபிவிருத்தி செய்யத் தேவையான வேலைத்திட்டத்தை நாங்கள் அமுல்படுத்தி வருகின்றோம். திருகோணமலை மாவட்டத்தில் பாரிய அபிவிருத்தியை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம். அதற்காக இந்தியா மற்றும் ஏனைய வெளிநாடுகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம். மேலும் இப்பகுதிகளுக்கு புதிய தொழில்களையும், முதலீடுகளையும் கொண்டு வர நடவடிக்கை எடுத்து வருகிறோம். விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தால், புதிய நிலம் விளைச்சளுக்கு பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் மக்கள் பெருமளவு வருமானம் ஈட்ட முடியும்.

மேலும், இந்தப் பகுதியில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த முடியும். ஹிகுரக்கொட விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படுவதன் மூலம் திருகோணமலை, மட்டக்களப்பு, பொலன்னறுவை, தம்புள்ளை, அனுராதபுரம் ஆகிய பிரதேச மக்களும் நன்மையடைவார்கள். மட்டக்களப்பு விமான நிலையமும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

இந்த சவாலை நாம் ஏற்க வேண்டும். அந்த சவாலை வென்று கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்றுவதற்கு நாம் செயற்பட்டு வருகின்றோம். மேலும், இனப்பிரச்சினையை இனியும் இழுத்தடிக்க வேண்டிய அவசியமில்லை, அதனை விரைவாக தீர்க்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றார்.

## அபிவிருத்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிந்துவிடாது.

நாட்டில் மீண்டும் ஒரு பொருளாதார சரிவைத் தவிர்க்க வேண்டுமாயின், புதிய பொருளாதாரப் பொறிமுறைக்கு நாம் துரிதமாக மாறவேண்டும். அது ஒரு போட்டிமிக்க, டிஜிட்டல் ஏற்றுமதி சார்ந்த பசுமைப் பொருளாதாரமாக இருக்கவேண்டும். அது நமக்குள்ள இரண்டாவது பொறுப்பு. எனவே, இந்தப் புதிய பொருளாதாரக் கொள்கையைசட்டப்பூர்வமாக்கபுதியஅணுகுமுறைக்குச் செல்ல முடிவு செய்தோம்.

மேலும், வெளிநாட்டு முதலீடு, ஏற்றுமதி வருமானம் மற்றும் பல பரிமான வறுமையைக் குறைப்பதற்கான அளவுகோல்கள் அமைக்கப்படவேண்டும். இப்பிராந்தியத்தில் அவ்வாறு செய்யும் முதல் நாடு இலங்கை என்று நான் நம்புகிறேன்.

ஒரு ஆளும் தரப்பு பொருளாதாரக் கொள்கையை முன்வைத்தவுடன், அடுத்துவரும் ஆளும் தரப்பு நிச்சயமாகஅந்தக்கொள்கையைமாற்றியமைக்கின்றது. அப்போதுநாம்ஒருநாடாகமுன்னேறமுடியாது. நாங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள பொருளாதார மாற்ற சட்ட மூலம், நீதிமன்றத்தின் ஆய்வுக்கு உட்பட்டுள்ளது. நாங்கள் தயாரித்த பொருளாதாரக் கொள்கைகளுக்கு மேலதிகமாக, முதலீட்டு சபையின் செயல்பாடுகளுடன் முழுமையான முதலீட்டு செயல்முறையையும் நிர்வகிக்கும் பொருளாதார ஆணைக்குழு போன்ற புதிய நிறுவனங்களையும் இந்த சட்டத்தின் மூலம் நிறுவ எதிர்பார்க்கப்படுகிறது.

முதலீட்டு வலயங்களை முகாமைத்துவம் செய்ய ஒரு தனியான முகவர் நிறுவனம், நமது சர்வதேச வர்த்தகத்தைமேம்படுத்தசர்வதேசவர்த்தகஅலுவலகம், உற்பத்தித் திறன் மேம்பாட்டை உறுதி செய்ய தேசிய உற்பத்தித்திறன்ஆணைக்குழுமற்றும்பொருளாதாரம், சர்வதேசவர்த்தகத்திற்கானநிறுவனம்ஆகியவைஇதில் அடங்கும். இந்தியாவும் இலங்கையும் இணைந்து செயல்படுத்த ஒப்புக்கொண்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை துரிதப்படுத்துவது குறித்து கடந்த வாரம் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் கலந்துரையாடினேன். இந்தியவெளிவிவகாரஅமைச்சர் ஜெயசங்கர் இது தொடர்பாக மேலும் கலந்துரையாட இலங்கைக்கு வருகை தந்தார்.

எதிர்கால அபிவிருத்தி இலக்கை அடைய, இலங்கை இந்தியாவுடன் சிறந்த ஒத்துழைப்புடன் முன்னோக்கிச் செல்ல எதிர்பார்க்கிறது. அதன்போது பல விசேட அபிவிருத்தித் திட்டங்களில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதில் முதலாவது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான மின்சார விநியோக வலையமைப்புகளை ஒன்றோடொன்று இணைப்பதாகும். அப்போது இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு நிலைபேறான வலுசக்தியைக் கடத்தும் திறன் உருவாகும். அதன் மூலம் புதிய வருமானத்தைப் பெற முடியும். மேலும், இந்த ஜூலை மாதம் சாம்பூரில் சூரிய சக்தித் திட்டத்தைத் தொடங்க முடியும் என எதிர்பார்க்கிறோம்.

இந்தத் திட்டம் எங்கள் வலுசக்திக் கூட்டாண்மைக்கு அடிப்படையாக அமைவதோடு, மேலும் காற்றாலை மற்றும் சூரிய சக்திக்கான பாக்கு நீரிணையை அபிவிருத்தி செய்யவும் நாம் எதிர்பார்க்கின்றோம். இரு நாடுகளும் ஒன்றிணைந்து சூரிய ஒளி மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்திக்கான பெரும் அளவிலான மின் உற்பத்தி நிலையத்தை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில்புதியபொருளாதாரத்தைஉருவாக்குவதே இதன் நோக்கமாகும். இதற்கு மேலதிகமாக, யாழ். குடாநாட்டின்பிரதானதுறைமுகமானகாங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவின் உதவியைப் பெற்றுக்கொள்வது குறித்தும் இந்திய வெளிவிவகார அமைச்சருடனான கலந்துரையாடலில் முன்னுரிமை வழங்கப்பட்டது.

இந்திய ஆளும் தரப்பின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் பலாலி விமான நிலையம் மற்றும்கொழும்புஇரத்மலானைவிமானநிலையத்தின் அபிவிருத்தித் திட்டம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இலங்கையின் தேசிய கால்நடை அபிவிருத்தி சபை, இந்தியாவின் அமுல் பால் நிறுவனத்துடன் இணைந்து, இந்நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்க நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன்,இலங்கைக்கும்இந்தியாவுக்கும்இடையில் தரைமார்க்கமான தொடர்பை ஏற்படுத்துவதற்கான திட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், திருகோணமலை அபிவிருத்தித் திட்டத்தை விரைவுபடுத்துவது குறித்தும் நாம் விரிவாகக் கலந்துரையாடினோம். திருகோணமலைஅபிவிருத்தித் திட்டத்தில் கைத்தொழில்களுக்கான முதலீட்டு வலயங்களும் உள்ளடங்கும். அதேபோன்று சுற்றுலாப் வலயத்தையும் கொண்டுள்ளது. மேலும் நாகப்பட்டினத்தில் இருந்து திருகோணமலைக்கு எண்ணெய்குழாய்அமைக்கவும்எதிர்பார்க்கப்படுகிறது. அது தொடர்பான இறுதி கண்காணிப்பு அறிக்கைக்காக காத்திருக்கிறோம்.

மேலும், திருகோணமலையை எண்ணெய் சுத்திகரிப்பு மையமாக மாற்ற எதிர்பார்ப்பதுடன், துறைமுகங்கள் மற்றும் முதலீட்டு வலயங்களை நிர்மாணிப்பதன் மூலம் திருகோணமலை துறைமுகம் வங்காளவிரிகுடாவில்ஒருபிரதானதுறைமுகமாகமாறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இன்று, முழு கிழக்கு கடற்கரையும்சுற்றுலாத்துறைக்காகதிறக்கப்பட்டுள்ளது. காலிமற்றும்தெற்கு பிரதேசங்களில்ஹோட்டல்களுக்கு மேலதிக காணிகள் வழங்கப்படுகின்றன. நாட்டில் புதிய முதலீட்டு வலயங்கள் திறக்கப்படும். எமது தொழிற் பயிற்சித் திட்டமும் விரிவுபடுத்தப்படுகிறது. எனவே, இந்தத் திட்டங்களில் இந்தியாவுடன் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகிறோம் என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# பிளாஸ்டர் விளையாட்டுகழகம் அம்பாறையில் சம்பியனானது

மாளிகைக்காடு செய்தியாளர்




அம்பாறை மாவட்ட 32 முன்னணி விளையாட்டுக்கழகங்கள் மோதிய கலாநிதி யூ.கே. நாபீர் வெற்றிக்கிண்ண ரி-10 கடினபந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியில் கல்முனை ஜீனியஸ் விளையாட்டுக்கழகத்தை ஆறு விக்கட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகம் சம்பியனானது.

கடந்த இரு மாதங்களாக நடைபெற்று வந்த கலாநிதி உதுமாங்கண்டு நாபீர் வெற்றிக்கிண்ண ரி-10 கடினபந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும், பரிசளிப்பும் சாய்ந்தமருது தலைவர் அஸ்ரப் ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கல்முனை ஜீனியஸ் விளையாட்டுக்கழகம் 10 ஓவர்கள் முடிவில் 09 விக்கட்டுக்களை இழந்து 72 ஓட்டங்களை பெற்றனர்.

அந்த அணியின் சார்பில் அஃஹாம் அதிரடியாக துடுப்பெடுத்தாடி 09 பந்துகளில் அதிகபட்சமாக 24 ஓட்டங்களை குவித்தார். பந்துவீச்சில் விளாஸ்டர் அணியின் பவாஸ் இரண்டு ஓவர்கள் பந்துவீசி 03 விக்கட்டுகளை வீழ்த்தினார்.

73 எனும் வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகம் 8.5 பந்து வீச்சு ஓவர்களை எதிர்கொண்டு 04 விக்கட்டுக்களை மட்டுமே இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகம் சார்பில் ஆபாக், ஷஹீன் ஆகியோர் சிறப்பாக துடுப்பெடுத்தாடியிருந்தனர். போட்டியின் நாயகனாக ஏ.என்.எம். ஆபாக் மற்றும் தொடரின் நாயகனாக இரண்டு சதமுப்பட குறைந்த பந்துகளில் அதிக ஓட்டங்களை குவித்த அஸாருதீன் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழக தலைவர் எம்.பி.எம். பாஜில் நெறிப்படுத்தலில் கழக தவிசாளர் ஏ.எம்.ஏ. நிசார் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதான அனுசரணை வழங்கியிருந்த நாபீர் பௌண்டஷன் தலைவரும், ஈ.சி.எம். நிறுவன பிரதானியுமான (கலாநிதி) பொறியியலாளர் யூ.கே. நாபீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்ததுடன், வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர் எம்.ஐ.எம். றியாஸ், கல்முனை சட்டத்தரணிகள் சங்க தலைவர் எம்.ஐ. ரைஸ/ல் ஹாதி, கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர் யூ.எல்.என். ஹுதா உமர், சாய்ந்தமருது பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.எல். சபூர்தீன், சாய்ந்தமருது அனைத்துப் பொதுநிறுவனங்கள் சம்மேளன தலைவர் ஏ.எல்.எம். பரீட், அல்- ஜலால் வித்தியாலய பிரதியதிபர் ரீ.கே.எம். சிராஜ், சம்மாந்துறை வலயக்கல்வி பணிமனை திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.எம். எம். முனாஸ், தொழிலதிபர் இஃரா யூ.எல். சத்தார் உட்பட சாய்ந்தமருது கிரிக்கட் சங்க நிர்வாகிகள், பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். (05)

# நீண்டநாள் பழுதடையாத செமன் பக்கெற் அறிமுகம்

எஸ்.எல்.ஐ.சி. நிறுவனத்தினால்



இலங்கையில் முதல் தடவையாக தேசிய ரின்மீன் உற்பத்தி நிறுவனமான எஸ்.எல்.ஐ.சி. நிறுவனத்தால் தனது நவீன தயாரிப்பான நீண்ட நாள்களுக்கு பழுதடையாமல் பாதுகாக்கக் கூடிய ஒருகிலோ எடை கொண்ட ஜக் மேக்கரல் செமன் பக்கற் ஒன்று சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்றது.

எஸ்.எல்.ஐ.சி. நிறுவனத்தின முகாமைத்துவப் பணிப்பாளரான கலாநிதி கபில பாலசூரியவால் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் வோனந்தாவிடம் சம்பிரததாயபூர்வமாக இந்த செமன் பக்கற் கைளிக்கப்பட்டதுடன்

பேக்கரி உற்பத்தியாளர்களுக்கு உகந்த வகையில் இது தயாரிக்கப்பட்டுள்ளதாக பாலசூரிய அமைச்சரிடம் தெரிவித்தார்.

இதன் போது அமைச்சர் தெரிவிக்கையில் - உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் நோக்கமெனவும் அதற்காக அனைத்து உதவிகளையும் அரசாங்கம் தேசிய உற்பத்தியாளர்களுக்கு வழங்கத் தயாராக இருப்பதாகவும் இதற்கு எஸ்எல்எஸ் (இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனம்) சான்றிதழை விரைவில் பெற்றுக் கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கினார்.

இந் நிகழ்வில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் நிசாந்த விக்கிரசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர. (05)

# தீப்பற்றிய நிலையில் ஓடிய மனிதர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில்



யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் வியாழக்கிழமை இரவு 10.00 மணியளவில் எரியூட்டப்பட்ட நிலையில் நபர் ஒருவர் பொதுமக்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மருதங்கேணியை சேர்ந்தவரே இவ்வாறு மீட்கப்பட்டு மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்படிருந்த நிலையில் அங்கிருந்தும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை இரவு வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் உள்ள தனது வீட்டில் தனியாக உறங்கியுள்ளார். இந்நிலையில், இரவு பத்து மணியளவில் எரிகாயங்களுடன் அலறியடித்து வீட்டில் இருந்து வெளியே ஓடிவந்த வேளை பொதுமக்களால் மீட்கப்பட்டு மருதங்கேணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மந்திகை ஊடாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் கண்காணிப்பு பிரிவு திறப்பு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் புதிதாக கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரிவை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது பிராந்திய பணிப்பாளர் நாடா வெட்டி புதிய பிரிவைத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பிராந்திய பிரிவு தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுமதியுடன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிர் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்முனை பிராந்தியத்தில் சுகாதார ரீதியாக மேலும் பல்வேறு பணிகளை முன்னெடுப்பதற்கு குறித்த பிரிவு ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# ரூ. 40 லட்சம் பெறுமதியான உயிர்காப்பு இயந்திரம் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு அன்பளிப்பு





(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு 40 லட்சம் ஷரூபா பெறுமதியான உயிர் காப்பு இயந்திரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை நன்கொடையாக அன்பளிப்புச் செய்யப்பட்டன.

நுகேகொடயைச் சேர்ந்த திருமதி குணசேகர இந்த உபகரணங்களை அன்பளிப்பு செய்திருந்தார். அவருக்கேற்பட்ட அனுபவமே இத்தகைய உதவி செய்யக் காரணமாக இருந்தது.

அவருடைய பிள்ளை பிறப்பின் போது இத்தகைய உயிர் காப்பு இயந்திரம் இல்லாமையால் ஏற்பட்ட ஆபத்தை ஏனையோர் உணரக்கூடாது என்பதற்காக டாக்டர் திருமதி சிறிநீதனூடாக இதனைக் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு வழங்கி வைத்தார்.

இந்த நன்கொடையில் 3 மில்லியன் ஷரூபா பெறுமதியான அதிநவீன சிசு இன்குபேட்டரும், ஒரு மில்லியன் ஷரூபா பெறுமதியான உயர் பாயும் ஆக்ஸிஜன் இயந்திரமும் உள்ளடங்கும்.

இந்த முக்கியமான உபகரணங்களை கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஏ.பி.ஆர்.எஸ். சந்திரசேனவிடம் நன்கொடையாளிகள் வழங்கி வைத்தனர். அச்சமயம் வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் எஸ்.இராஜேந்திரனும் சமுகமளித்திருந்தார்.

திருமதி எம்.எஸ். குணசேகர மற்றும் அவரது குடும்பத்தினரின் நம்பமுடியாத பரிசு இது. மிகவும் பாதிக்கப்படக்கூடிய நோயாளிகளுக்கு - புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு நாங்கள் வழங்கும் கவனிப்பில் ஆழமான தாக்கத்தை இது ஏற்படுத்தும் என நம்புகிறேன் என்று பணிப்பாளர் டாக்டர் சந்திரசேன நன்றியுடன் தெரிவித்தார்.

திருமதி எம்.எஸ்.குணசேகர மற்றும் குழந்தை நல மருத்துவர் வைத்தியர் ரோசாந்த் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர் வைத்தியர் ஸ்ரீநீதன் அவரது மனைவி வைத்தியர் சிறிநீதன் ஆகியோர் இந்த வாழ்க்கையை மாற்றும் நன்கொடையைப் பெறுவதற்கு உதவியாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(05)

# ஜனாதிபதியின் மன்னார் பயணம் தொடர்பாக மீனவர்கள் கவலை

*எதிர்வரும் மாதங்களில் ஜனாதிபதி தேர்தல் ஒன்று வரவுள்ளது. அப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னாரிற்கு வந்து தான் ஆக வேண்டும். மீனவர்களிடம் வாக்கு கேட்கத்தான் வேண்டும். அப்போது மீனவர்களே இறுதி முடிவு எடுப்பார்கள் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.*

*மன்னாரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை நீண்ட புரையோடிப்போன ஒரு விஷயமாக உள்ளது.கடந்த வாரம் மன்னாருக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதியை சந்திப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதும் பயனளிக்கவில்லை.*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மன்னார் விஜயம் எதற்கானது என்று கூட தெரியவில்லை. வடக்கில் உள்ள பல்வேறு வளங்களை எவ்வாறு அந்நியர்களுக்கு கையளித்து எவ்வாறு இந்த நாட்டிற்கான வருவாயை பெற்றுக்கொள்ளலாம் என்பதே காரணமாக உள்ளது.*

*நிலமாக இருந்தாலும் சரி கடலாக இருந்தாலும் சரி இந்த இரண்டையும் மையப் படுத்தியதாகக் காணப்படுகின்றது.*

*கடலில் இருக்கின்ற அனைத்து வளங்களும் இந்தியாவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. காற்றாலையாக இருந்தாலும் சரி கனிய மணல் அகழ்வாக இருந்தாலும் சரி இந்தியாவிடம் கையளிக்கப்பட்டு விட்டது.*



*நாங்கள் மீனவர்களின் பிரச்சினையைக் கதைப்பதற்காகவே மாத்திரம் ஜனாதிபதியை சந்திக்க சந்தர்ப்பம் கோரினோம்.*

*எந்த அபிவிருத்திக்கும் நாங்கள் தடையானவர்கள் இல்லை. எமது வாழ்வாதாரப் பிரச்சினையைக் கதைப்பதற்கு அவரை அணுகுகின்ற போது அவர் அதைத் தட்டிக் கழிக்கின்றார்.*

*யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரிற்கு ஜனாதிபதி விஜயம் மேற்கொண்ட போது அவரை சந்திப்பதற்கான எமது கோரிக்கை தட்டி கழிக்கப்பட்டுள்ளது.*

*மீனவர்களை ஏன் அவர் கண்டுகொள்ளவில்லை.வடமாகாணமும் மன்னார் மாவட்டமும் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.*

*எதிர்வரும் மாதங்களில் ஜனாதிபதி தேர்தல் ஒன்று வரவுள்ளது. அப்போது இவர் மன்னாரிற்கு வந்து தான் ஆக வேண்டும். மீனவர்களிடம் வாக்கு கேட்கத்தான் வேண்டும். மீனவர்களே இறுதி முடிவு எடுக்க வேண்டும். - என்றார்.*

*(05)*

# பிறரின் கையடக்க தொலைபேசிகள் சிம் அட்டைகளைக் கொண்டு மோசடி

## சந்தேகநபருக்கு விளக்கமறியல்

பிறரின் கையடக்க தொலைபேசி சிம் அட்டைகளை பயன்படுத்தி லட்சக்கணக்கில் பண மோசடி செய்த சந்தேக நபரை ஜூலை 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபரான ஹற்றனைச் சேர்ந்தவர், குற்றப் புலனாய்வுப் பிரிவின் சைபர் குற்றவியல் கண்காணிப்புப் பிரிவினரால் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகே விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட பிரதம நீதிவான் திலின கமகே, வழக்கு விசாரணைகளை ஜூலை 4ஆம் திகதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார்.

சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷவுடன் ஏ.ஏ.எல். ஜயரத்னராஜா சந்தேக நபருக்காக நீதிமன்றில் ஆஜரானார்கள். (05)

# ஜனாஸா எரிப்பை ஆராய ஆணைக்குழு வேண்டும்

## கலீலுர் ரஹ்மான் கோரிக்கை

(எஸ்.அஷ்ரப்கான்)

முஸ்லிம் ஜனாஸாக்களை தீக்கிரையாக்கிய சம்பவத்தை முஸ்லிம் சமூகம் மறந்துவிட்டு தகனத்தில் ஈடுபட்ட குழுவினரை மன்னிக்க வேண்டும் என்று அந்த உரையிலிருந்து ஜனாதிபதி எதிர்பார்க்கின்றாரா? என ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் கேள்வியெழுப்பியுள்ளார்.

உடல் உறுப்புகளை தகனம் செய்தல், அடக்கம் செய்தல் மற்றும் தானம் செய்தல் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் அறிவித்துள்ள புதிய சட்ட விதிமுறைகள் தொடர்பான ஜனாதிபதியின் யோசனை விவகாரத்தில், கொவிட் தொற்றுக்குள்ளான சடலங்களை தகனம் செய்தமை தொடர்பில் அண்மையில் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது. அந்த உரைகளின்போது ஜனாதிபதி கூறிய கருத்துக்கள் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஐ.ஏ.கலீலுர் ரஹ்மான் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில் -

தகனத்தில் ஈடுபட்ட குழுவினரை மன்னிக்க வேண்டும் என்று ஜனாதிபதி எதிர்பார்த்தால் முஸ்லிம் சமூகம் பெரும் அதிர்ச்சியும், வேதனையும் அடையும். அதற்குக் காரணம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரிவினைவாத, தீவிரவாதச் சிந்தனைகள் இல்லாத மனிதாபிமானி என்பதை இந்நாட்டு மனிதாபிமான சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்எம்மரிக்காரும் அந்த கருத்து தொனிப்படத் தெரிவித்திருந்தார். எனவே, கொவிட் தொற்றால் இறந்தவர்களின் உடல்களை தகனம் செய்வது தொடர்பாக முடிவெடுத்த குழு தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தவும், பாதிக்கப்பட்ட இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தின் மனங்களை சாந்தப்படுத்தவும் ஜனாதிபதி ஆணைக்குழுவை அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் உடனடியாக நியமிக்க வேண்டும். தகனம் மூலம், அநியாய சம்பவத்தை செய்த குழுவுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என முஸ்லிம் சமூகத்தின் சார்பில் இந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியை கேட்டுக்கொள்கிறேன்.

பூகோள அரசியல் சதிக்காக உடல்களை தகனம் செய்ய முடியும் என்ற முடிவை ஒரு சிறு குழுவினர் எடுத்தார்கள் என்றால் அவர்களின் பின்னால் கண்ணுக்குத் தெரியாத சக்தி இருக்கிறதா என்று கண்டுபிடிப்பது நாட்டுக்கு நல்லது. ஏனெனில் நாடளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில போன்ற கடும்போக்கு சிந்தனை கொண்டவர்கள் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு ஆதரவாக நின்ற போது அதே அரசாங்கத்தின் மற்றுமொரு தரப்பு எதிர்த்தாக பாராளுமன்ற உறுப்பினர்களான வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்தை சாதாரணமாக கடந்து செல்லவோ அல்லது நிராகரிக்கவோ முடியாது. அத்துடன், பேராசிரியர் மெத்திகாவுக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி மற்றும் பல பாராளுமன்ற உறுப்பினர்களால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை நிராகரிக்கவும் முடியாது.

நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது அமைச்சின் ஊடாக மேற்கொண்ட ஆய்வு அறிக்கையில் கொரோனா வைரஸ் நீரினால் பரவுவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கொரோனா சடலங்களை அடக்கம் செய்ய வேண்டும் என்ற கருத்தை முன்வைத்த குழுவின் அறிக்கைக்கு சிங்கள தேசியவாத முகாமை பிரதிநிதித்துவப்படுத்திய மெதகொட அபயதிஸ்ஸ தேரர், கலேகாட அத்தே ஞனசார தேரர், விமல் மற்றும் கம்மன்பில எம்.பி.க்கள் ஆதரவாக இருந்தால், பேராசிரியர் மேத்திகா பிரதிநிதித்துவப்படுத்தும் குழு ஏன் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதை எதிர்த்தது?

முஸ்லிம் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்பட்டமை இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்திற்கு அநீதி இழைத்தது என்பதையே அப்பட்டமாக வெளிக்காட்டுகிறது. இதுவரை பல்வேறு தரப்பினராலும் வெளியான கருத்துகள் அனைத்தும் உண்மைகளையே உணர்த்துகின்றன. இந்த அநியாயம் முஸ்லிம் சமூகத்தின் இதயங்களை கடுமையாக தாக்கியுள்ளதுடன் நிகழ்காலத்திற்கு மட்டுமல்ல எதிர்காலத்திற்கும் பரப்பக்கூடிய ஒரு கருத்தியல் ஆயுதமாக அரசியல் மேடையில் இந்த விடயம் உள்ளது.

அந்த சித்தாந்தத்தை ஆயுதமாகப் பயன்படுத்தும் எந்த அரசியல் தலைவர்களும் தகனம் செய்யப்பட்ட குடும்ப உறுப்பினர்களை ஒரே இடத்தில் கூட்டி அவர்களுக்கு உளவியல் ஆலோசனைகளை வழங்குவதற்குப் பதிலாக அல்லது உடைந்த இதயங்களை அணைப்பதற்குப் பதிலாக, கட்சி மற்றும் எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் அவர்களின் இதயங்களை இன்னும் கொதிப்படையச் செய்வார்கள் என்பதே உண்மை. எனவே ஈஸ்டர் தாக்குதலில் இறந்தவர்கள் சார்பாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு நடவடிக்கைகள் போன்று ஜனாஸாக்கள் தகனத்துக்குள்ளாகிய குடும்பத்தின் மனித உரிமை மீறலுக்கு எதிராக நீதிமன்றத்தின் உதவியை நாடி தகன முடிவை எடுத்த குழுவுக்கு எதிராக முஸ்லிம் சமூகத்தின் மத, சிவில், அரசியல் தலைவர்கள் நீதியை பெற்றுக்கொடுக்க முன்நிற்க வேண்டும் என மேலும் கேட்டுக்கொண்டார். (05)

காலைக்கதிர் Kalaikkathir






## கிரிகெட் சுற்றுப்போட்டி

(எம்.எப்.றிபாஸ்)

பாலமுனை சுப்பர் ஓர்கிட் விளையாட்டுக்கழகத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி பாலமுனை ஹிக்மா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

கழகத்தின் தலைவர் ஜே.அமீன் தலைமையில் இடம்பெற்ற இச்சுற்றுப் போட்டியின் இறுதி போட்டிக்கு அக்கரைப்பற்று லீ ஸ்டார் மற்றும் டீனஸ் ஸ்டார் விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றி லீ ஸ்டார் கழகம் வெற்றி பெற்றது.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னணி கழகங்கள் கலந்து கொண்ட இந் நிகழ்வுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும், மெட்றோபொலிடன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் பிரதம அதிதியாகவும்,அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.அன்சில், கழகத்தின் ஆலோசகரும்,அதிபருமான பீ.முஹாஜிரின், பாலமுனை மு. கா. அமைப்பாளர் அலியார் ஆகியோர் கௌரவ அதிதியாக கலந்து கொண்டு வெற்றி பெற்ற கழகத்தினருக்கு வெற்றிக்கேடயங்களை வழங்கி வைத்தனர். (05)

## 15 தினங்கள் தொடர் சொற் பொழிவு நிறைவு

உடுப்பிட்டி பத்திரகாளி அம்பிகா சமேத சந்திரசேகர வீரபத்திரர் சுவாமி ஆலய குரோதி வருட வருடாந்த மகோற்சவப் பெருந்திருவிழாவில் 06.06.2024 தொடக்கம் 20.06.2024 வரை 15 தினங்கள் 'சமயமும் மக்களின் நடைமுறைவாழ்வும்' என்னும் விடயப்பொருளில் தொடர் சொற்பொழிவாற்றிய பண்டிதர் செஞ்சொல்வேந்தர் சைவப்புலவர் செ.த.குமரன் அவர்கள் ஆலய பரிபாலன சபையினரால் கௌரவிக்கப்பட்டார். (05)

## பாணந்துறை கடலில் நீராடிய 10 பேர் வைத்தியசாலையில்

பாணந்துறை கடலில் நீராடிக் கொண்டிருந்த 10 பேர் திடீரென சுகவீனமடைந்துள்ள நிலையில் அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என பாணந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

கடலிலிருந்த ஜெலிமீன்கள், கடலில் நீராடிக் கொண்டிருந்தவர்களின் உடல்களில் பட்டதால் அங்கு இருந்த அனைவருக்கும் தோல் அரிப்பு மற்றும் தோல் எரிச்சல் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, சுகவீனமடைந்தவர்கள் அனைவரும் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# பல்கலை மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கி வைப்பு





(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகிய, தந்தையை இழந்த மாணவர்களுக்கு கல்வியை தொடரப் பணவசதி அற்ற மாணவர்களுக்குமாக மொத்தம் 64 மாணவர்களுக்கு திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் வெள்ளிக்கிழமை, மூன்று மாதத்துக்கான நிதியுதவி வழங்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட நலன்புரி சங்கத் தலைவர் கதிரவேலு சண்முகம் குகதாசன், செயலாளர் கணபதிப்பிள்ளை சிவானந்தன் ஆகியோர் இதற்கான காசோலைகளை திருகோணமலையில் உள்ள அலுவலகத்தில் வைத்து வழங்கி வைத்தனர். இதற்கான நிதி உதவியைக் கனடாவில் உள்ள திருகோணமலை நலன்புரிச் சங்கம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் கதிரவேலு சண்முகம் குகதாசன், கல்வியின் முதன்மை பற்றியும் எதிர்காலத்தில் மாணவர்கள் ஆற்ற வேண்டிய சமூகப் பணிகள் பற்றியும் மாணவர்களுக்கு இதன் போது எடுத்துரைத்தார். (05)

## சம்மாந்துறை மண் மீது போலியான சாயம் பூசுவதற்கு அதன் பிரதிநிதியான நான் ஒருபோதும் அனுமதியேன்

### எச்.எம்.எம். ஹரீஸ் எம்.பி. திட்டவட்டம்

(நூருல் ஹுதா உமர்)



போர்க் காலத்தில் காரைதீவின் பல்லாயிரக்கணக்கான தமிழ் சகோதரர்களுக்கு உதவிக்கரம் நீட்டி அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் சம்மாந்துறை முஸ்லிம் சமூகம் என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

அப்படிப்பட்ட மக்கள் மீது இனவாதமாக விரல் நீட்டுவதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதேபோன்று அவர்கள் இழந்து நிற்கும் உரிமைகள், கரங்கா காணிப்பிரச்சினை, பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்த வேண்டிய தேவை, நிர்வாக அதிகாரிகளுக்கு முறையற்ற நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமை போன்ற சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் வழங்கப்பட்டு உடனடியாக அந்த மக்களின் தேவைகள் நிவர்த்திக்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும்,நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம். முஹம்மட் ஹரீஸ் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

இலங்கை சுதந்திரமடைந்த நாளிலிருந்து தனது மண்ணின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தி வந்த அம்பாறை மாவட்டத்தின் இதயமாக இருக்கும் சம்மாந்துறை தொகுதி இன்று தனது நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்திருக்கும் சந்தர்ப்பத்தில் எல்லோரும் வந்து பந்தாடும் இடமாக சம்மாந்துறை மாறி வருகின்றமையை எண்ணி நாங்கள் வேதனையுடன் இருக்கிறோம். அந்த மாவட்டத்தில் அந்த மக்களின் வாக்குகளை பெற்ற அந்த மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதி என்ற வகையில் அங்கு நடைபெறும் அநியாயங்களை சுட்டிக்காட்டி நீதிகோரி உரியவர்களிடம் நாங்கள் பேசியும் இந்த நிமிடம் வரை நியாயங்கள் கிடைக்கவில்லை.

அந்த மக்களின் நிர்வாகப் பதவிகளில் நிறைய அநியாயங்கள் நடக்கின்றன. நாட்டின் சட்டங்களை மீறி, உள்ளூராட்சி சட்டங்கள், நகர திட்டமிடல் சட்டங்கள் போன்ற பல சட்டங்களை மீறி எவ்வித முறையான அனுமதிகளுமின்றி சில நிர்மாணப் பணிகளை செய்கின்ற போது சட்டரீதியாக செய்யுமாறு பணித்தாலும் அவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளாது சட்டத்தை மீறி நடக்கும் போது அதை இனவாதக் கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள். அது பற்றி நாடாளுமன்ற அமர்விலும் பேசப்பட்டுள்ளது.

பல வரலாறுகளை கூறி சம்மாந்துறை மக்களை பிழையான கண்ணோட்டத்தில் இன்று காட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அநீதிக்குள்ளான சம்மாந்துறை மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதி என்ற வகையில் இன்னும் அநீதிக்குள்ளாக்கும், இனவாத சாயம் பூசும் நடவடிக்கையை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

1985 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காரைதீவில் வன்முறை மூண்டபோது காரைதீவின் பல்லாயிரக்கணக்கான தமிழ் சகோதரர்களுக்கு உதவிக்கரம் நீட்டி அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் சம்மாந்துறை முஸ்லிம் சமூகம் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. அந்த மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் வழங்கப்பட்டு உடனடியாக அந்த மக்களின் தேவைகள் நிவர்த்திகப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் - என்றார். (05)

# பயிர்கள் உடைமைகளுக்கு காட்டு யானைகளால் சேதம்

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள ஈச்ச நகரில் காட்டு யானை தங்களது பயிர்களை துவம்சம் செய்துள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை இடம் பெற்றுள்ளது.

இதில் பயன் தரும் வாழை, தென்னை, மரவள்ளி உள்ளிட்ட பல மரங்களை யானைகள் துவம்சம் செய்து விட்டு சென்றுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இக் காட்டு யானை தொடர்ந்தும் தங்களது ஊருக்குள் இரவு வேலைகளில் தூக்கத்தின் போது வருவதால் நிம்மதியாக தூங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தங்களது வீடுகளுக்கும் பயிர்களுக்கும் சேதம் விளைவித்து சென்றுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

சுமார் 15 இற்கும் மேற்பட்ட தென்னை வாழை மரங்களை முற்றாக நாசமாக்கின எனவும் குறித்த பகுதியில் பாதுகாப்பான யானை வேலி இன்மையால் இச் சம்பவங்கள் இடம் பெறுகின்றன எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் தங்களையும் தங்கள் உடைமைகளையும் இக் காட்டு யானையில் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுக்கின்றனர். (05)

# வவுனியா வைத்தியசாலை வீதி ஒரு வழிப்பாதையாக மாற்றம்

வவுனியா பொது வைத்தியசாலை சுற்று வட்ட வீதி ஒரு வழிப்பாதையாக மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பொது வைத்தியசாலைக்குச் செல்லும் குறித்த வீதியில் நீண்டகாலமாக வாகன நெரிசல் ஏற்ப்பட்டுவருகின்றது,இதனால் அந்த வீதியைப் பயன்படுத்தும் பொதுமக்கள், பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியிருந்ததுடன் அம்புலன்ஸ்களும் சிரமத்துடனேயே பயணிக்கவேண்டியிருந்தது.

இந்நிலையில் குறித்த வீதி, எதிர்வரும் வாரங்களிலிருந்து ஒரு வழிப்பாதையாக மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக வவுனியா பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டத்திலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அந்தவகையில் வவுனியா கண்டி வீதி வழியாக வருகைதரும் பொதுமக்கள் வழமைபோல வைத்தியசாலை சுற்று வட்டத்தைப் பயன்படுத்தி வைத்தியசாலை வீதியால் தமது பயணத்தை மேற்கொள்ள முடியும். அத்துடன் பூந்தோட்டம் பகுதியிலிருந்து வைத்தியசாலைக்கு வருகைதரும் பொதுமக்கள் கித்துள் வீதியையோ அல்லது குளவீதியைப் பயன்படுத்தி வைத்தியசாலைக்குச் செல்ல முடியும்.

இது தொடர்பான தீர்மானங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அதனை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் சிரமங்கள் தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகம், நகரசபை, பிரதேசசெயலகம், பொலிஸார் ஆகியவை இணைந்து கலந்துரையாடி தீர்க்கமான முடிவை எடுக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(05)

# மன்னார் முருங்கனில் வயோதிப பெண் சாவு

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, முருங்கன் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட இசைமாலைத் தாழ்வுப் பகுதியில் ஹயஸ் ரக வாகனம் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்கு உள்ளாகியதில் அதில் பயணித்த 14 பேர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கல்முனையில் இருந்து மன்னார் மறிச்சுக்கட்டி பிரதேசத்திற்குக் குறித்த வாகனத்தில் வருகை தந்தவர்களின் வாகனம் முருங்கன், இசைமாலை தாழ்வு, நரிக்காடு வளைவு பகுதியில் உள்ள மின் கம்பத்துடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த அனைவரும் முருங்கன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக 7 பேர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இவர்களில் வயோதிப பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வாகனத்தில் பயணித்தவர்கள் ஒரே குடும்பத்தைச் சார்ந்த உறவினர்கள் எனத் தெரிய வருகிறது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர.(05)

# கோழிகள், காகங்கள், நாய்கள் மன்னாரில் மர்மமாகச் சாவு

## வேதனையில் மக்கள்





மன்னார் உப்புக்குளம் நளவன் வாடி பகுதியில் நாய்கள் மற்றும் காகங்கள் தொடர்ச்சியாக மர்மமான முறையில் உயிரிழந்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவமானது கடந்த சில தினங்களாக நடைபெற்று வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர் .

இது குறித்து அப்பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கையில் -

மிகவும் ஆரோக்கியமாக அனைத்து தடுப்பூசிகளும் போடப்பட்டு கிரமமான முறையில் பராமரிக்கப்பட்டு வந்த நாய்கள் திடீரென இறப்பது தங்களுக்கு வேதனையளிப்பதாகவும் தெரிவித்தனர்.

குறித்த நாய்கள் வீட்டில் இருந்து வெளியில் சென்ற நிலையிலே இந்தச் சம்பவம் இடம்பெற்று வருகின்றது.

இதுவரை 8 நாய்கள் இவ்வாறு உயிரிழந்த நிலையில் மேலும் மூன்று நாய்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் குறித்த நாய்களுக்கு அப்பகுதியில் விஷம் கலந்த உணவை எவராவது வழங்கியிருக்கலாம் எனவும் சந்தேகிக்கின்றனர்.

இந்நிலையில் நாய்கள் மாத்திரமன்றி காகங்கள் மற்றும் கோழிகளும் உயிரிழந்துள்ளன எனத் தெரியவருகின்றது.

இச் சம்பவம் குறித்து உரிய அதிகாரிகள் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். என நாய்களின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (05)




# 2024 இந்திய தேர்தல் முடிவு.....

சந்தேகக் கண் கொண்டுதான் பார்ப்பார்கள். பழைய முறை கருத்துக் கணிப்புகளுக்கு மட்டுமே மதிப்பு ஏற்படும். யோகேந்திர யாதவ் வீடு வீடாகச் சென்று பேசி, மக்களுடைய மனங்களைத் தெரிந்துகொண்டு கணிப்பார். அத்துடன் தேநீர்க் கடைகளிலும் பேருந்துகளிலும் மக்களிடையே பேசி கருத்தறிவார். நம்பகமான, ஆனால் அதிக நேரம் எடுக்கக்கூடிய அந்த வழிமுறைக்கே இனி மரியாதை திரும்பும். சமூக மானுடவியலில் அதுவே ஏற்கப்பட்ட வழிமுறை என்பதும் முக்கியம்.

### ஏழாவது

'அரசியலில், பொருளாதாரமும் முக்கியம் முட்டாள்களே' என்ற வாதம் எடுபட்டிருக்கிறது. மோடி ஆட்சியில் ஏற்பட்ட வளர்ச்சியானது 'அமைப்புரீதியாக திரட்டப்பட்ட சமூகத்துக்கும் துறைகளுக்கும்தான் வருவாயை அதிகப்படுத்தியது' என்பதை பேராசிரியர் அருண் குமார் சுட்டிக்காட்டிக்கொண்டே வருகிறார். ஆனால், வேலைவாய்ப்பில் 95மூ, 'அமைப்பு சாராத' துறைகளில்தான் ஏற்படவேண்டும். மிகக் குறைவான மக்களுக்கான துறையில் மட்டும் காணும் வளர்ச்சி நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தவோ, மக்களுடைய வருவாயைப் பெருக்கவோ, ஏற்றத்தாழ்வுகளைப் போக்கவோ உதவாது. 'சலுகைசார்' முதலாளித்துவத்தால் ஏற்படும் பொருளாதார வளர்ச்சிக்கும் அமைப்பு சாராத துறையில் ஏற்பட்டுவரும் பின்னடைவுகளுக்குமான மோதல், மோடி ஆட்சியின் மூன்றாவது காலகட்டத்தில் நிச்சயம் பெரிதாகும்.

### எட்டாவது

மோடியின் மாயாஜாலத்தை உடைத்ததில் சமூக ஊடகங்களுக்குப் பெரிய பங்கு இருக்கிறது. மோடிக்கு ஆதரவான கருத்துகளையும் பேட்டிகளையும் கட்டுரைகளையும் 'கோடி மீடியா' உருவாக்கியபோது அதை எதிர்த்து நிற்க சமூக ஊடகங்கள்தான் கை கொடுத்தன. உண்மைகளை ஊடகங்கள் வெளியிட முடியாமல் தொழில்நுட்பம் மூலமும் சட்டக் குறுக்கீடுகள் மூலமும் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. துருவ் ரத்தி போன்றவர்களின் உறுதியான - விடாப்பிடியான காணொலி பரப்புரைகள் 100 கோடிக்கும் மேற்பட்ட இந்தியர்களால் தொடர்ந்து பார்க்கப்பட்டதன் விளைவு, தேர்தல் முடிவுகளில் எதிரொலித்தது. மோடியின் சர்வாதிகாரத்துக்கு எதிராக 'வாட்ஸப்' செய்திகள் அணிவகுத்தன.

### ஒன்பதாவது

தேர்தல் பரப்புரையின் போது தேர்ந்தெடுத்த சில ஊடகங்களுக்கு மட்டும் மோடி அளித்த பேட்டியானது அவருடைய ஆணவத்தையே வெளிப்படுத்தியது. மோடியின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய நீலாஞ்சன் முகோபாத்யாய், கரண் தாப்பருக்கு அளித்த சமீபத்திய பேட்டியில், 'கடவுள் தன்னை சிறப்பானதொரு சேவைக்காக அனுப்பியிருக்கிறார்' என்று மோடி கூறியதுகூட அவருடைய ஆணவத்தை வெளிப்படுத்தும் பேச்சு என்று குறிப்பிட்டிருக்கிறார்.

குஜராத் முதல்வராவதற்கு முன்னதாகவே மோடியைப் பேட்டி கண்ட ஆசிஷ் நந்தி அவரை, 'பாசிஸத்தின் இலக்கணம்' என்று கணித்திருக்கிறார். தேர்தல் பரப்புரையின்போது முஸ்லிம்களைக் குறிவைத்து மோடி பேசிய வார்த்தைகள் அவர் ஆதிக்கச் சுபாவம் உள்ளவர், இஸ்லாமிய வெறுப்பை சிறுவயது முதலே கொண்டவர் என்பதைக் காட்டுகின்றன.

### பத்தாவது

மோடிக்கும் ஆர்ளஸ்ஸ் அமைப்புக்கும் இனி உறவு சுமுகமாக இருக்காது. இரு தரப்புக்குமான மோதல் அவ்வப்போது வெளிப்படும். 'ஆர்ளஸ்ஸ்ஸை பாஜக நம்பியிருக்கவில்லை' என்று பாஜக தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா 2024 மே 22 பேட்டியில் தெரிவித்தார் 'ஆர்ளஸ்ஸ் தொண்டர் எப்போதும் தன்னடக்கத்துடன்தான் பேச வேண்டும், ஆணவம் கூடாது' என்று மோடியின் பெயரைக் குறிப்பிடாமல் ஜூன் 10 நிகழ்ச்சியில் ஆர்ளஸ்ஸ் தலைவர் மோகன் பாகவத் சாடியிருக்கிறார். மணிப்பூரில் உள்நாட்டுப் போர் முடிவுறாமல் தொடருவதை அவர் சுட்டிக்காட்டியிருப்பது மோடியின் நிர்வாகத்தின் மீதான கண்டனமாகும். இதை பெரிய மோதலாகவும் கருதிவிட முடியாது. மணிப்பூர் பற்றி எரிவது மோகன் பாகவத்துக்கு இத்தனை நாள்களாகத் தெரியாதா? மக்களவைத் தேர்தல் முடிவுக்குப் பிறகு இதைப் பேசுவானேன்? இரு அமைப்பினரும் இன்றைக்கு அடித்துக்கொள்வார்கள் - நாளைக்கு அணைத்துக்கொள்வார்கள்.

### முக்கியமானது

2024 மக்களவைப் பொதுத் தேர்தல் முடிவு இந்திய அரசியலை அப்படியே தலைகீழாகப் புரட்டிப்போட்டுவிடவில்லைதான் அதேசமயம் ஆளும் பாஜகவை நன்றாக உலுக்கியிருக்கிறது. மோடியின் கடந்த ஆட்சியில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 146 உறுப்பினர்களை நாடாளுமன்றத்தைவிட்டு அற்ப காரணத்துக்காக வெளியேற்றினார்கள். இனி அப்படியெல்லாம் நடக்காது. இருந்தாலும் எதிர்க்கட்சிகள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

ஆளும் கூட்டணிக்குப் பண பலம் அதிகமாக இருக்கிறது. ஆளும் கூட்டணியின் தோழமைக் கட்சிகளைக் கவர்ந்திழுக்க 'இந்தியா' கூட்டணி முயலும் அதேவேளையில், தங்களுடைய கூட்டணியிலிருந்தும் எவரும் நழுவிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தேர்தல் முடிவுக்கு முன்னதாக இந்திய பங்குச் சந்தையில் ஏற்பட்ட திடீர் எழுச்சியும், பிறகு தேர்தல் முடிவுக்குப் பிறகு ஏற்பட்ட வீழ்ச்சியும் நமக்குப் பசுமையாக நினைவிலிருக்கும்.

- த வயர் -அருஞ்சொல்

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.06.2024இல் வெளியிடப்பெற்றது.